

2017

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

නවීන තාක්ෂණ පිළිබඳ ආතර් සී ක්ලාක් ආයතනය.

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம்.

Arthur C. Clarke Institute for Modern Technologies.

உள்ளடக்கம்

1.0	பொது தகவல்	01
2.0	நிறைவேற்றுனர் பொழிப்புரை	04
3.0	நிறுவகத்தின் பிரிவுகள்	07
4.0	தேசிய முக்கியத்துவம் மிகு கருத்திட்டங்கள்	08
5.0	ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்	12
5.1	எந்திரவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கைத்தொழிற் துறையினை நோக்காகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்	12
5.2	எந்திரவியலில் தகவல் தொழினுட்பத்தில் அக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்	13
5.3	வானியலாராய்ச்சியில் ஆராய்ச்சி கருத்திட்டங்கள்	19
5.4	விண்வெளி தொழில்நுட்ப பிரயோகத்தில் ஆராய்ச்சி	20
5.5	ஆக்க உரிமைகளும் பிரசுரிப்புகள்	22
5.6	சோதனை மற்றும் அளவீடுகள், வன்பொருள் மீட்பு மற்றும் உசாவுத்துணை சேவைகள்	23
6.0	பயிற்சி, கல்வி மற்றும் தகவல்களை பரப்புதல்	27
6.1	தொழில்சார்பியலாளருக்காக தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	27
6.2	அடிப்படை மற்றும் இடைநிலை மட்டாத்து தொழில்நுட்பவியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	28
6.3	விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பிரபல்யப்படுத்துகையும் தகவல்களை பரப்புதலும்	29
7.0	மனித வள அபிவிருத்தி	33
8.0	2017 ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்று	34
8.1	நிதி நிலைமைக் கூற்று	34
8.2	2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுகைகூற்று	35
8.3	விரிவான நிதி செயலாற்றுகை கூற்று	36
8.4	காசோட்டக் கூற்று	39
8.5	முக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	41
9.0	திட்டமிடப்பட்ட குறுகிய மற்றும் இடைநிலை நடவடிக்கைகளின் விபரங்களின் தொகுப்பு	61
10.0	தணிக்கையாளர் பொது அறிக்கை	63
11.0	கணக்காய்வாளர் நாயகத்தின் கண்டெமண்ட்டிற்கு உதவுகிறது	75

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகம்
கட்டுபெத்த,
மொரட்டுவ.
2019.05.23

கௌரவ. விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்
விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு,
மூன்றாவது தளம், செத்சிரிபாய – 1வது கட்டிடம்,
பத்தரமுல்ல.

கௌரவ அமைச்சர்,

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் 2017 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையுள்ள காலப்பகுதிக்குரிய ஆண்டறிக்கை

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்பவியல் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் VII ஆம் பகுதியிலுள்ள நியதிகளின் பிரகாரம் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் 2017 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையுடன் கீழ் வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதில் நான் பெருமையடைகிறேன்.

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதிச் செயலாற்றுகை கூற்றின் ஒரு பிரதி
(ஆ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி நிலைமை பற்றிய கூற்றின் ஒரு பிரதி
(இ) கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையும் அவை தொடர்பில் அவதானிப்புரைகளும்

அமைச்சரவையின் அனுமதியினை பெறுதலிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

தங்கள் உண்மையுள்ள,

.....
பணிப்பாளர் நாயகம் மற்றும் சி.நி.அ.
நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகம்.

1.0 பொது தகவல்கள்

ஆளுகை சட்டம்

நியதி சட்ட கூட்டுத்தாபனமான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிலையம் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் செயற்படுகின்றது. 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிலையத்தினை பின்தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியன்று 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை பாராளுமன்ற விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தினால் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகம் தாபிக்கப்பட்டது.

சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் செயற்பாடுகள் வருமாறு;

(அ) இலங்கையில் நவீன தொழில்நுட்பவியல் அறிமுகப்படுத்துகையை விரைவுபடுத்துவதற்கு

(i) நவீன தொழில்நுட்பவியல் பிரயோகத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஆரம்பித்தல், மேம்படுத்தல், நடாத்துதல்

(ii) நவீன தொழில்நுட்பவியல் பிரயோகங்கள் தொடர்பில் செயலாற்றும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு அது தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் உதவிகளை வழங்குதல்

(iii) அரச தனியார் துறைகளினால் பொறுப்பேற்கப்பட்டவற்றின் தேவைப்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்கு நவீன தொழில்நுட்பவியல் ஆளணிகளை பயிற்றுவித்தல்

(ஆ) எதிர்கால ஆய்வுகளை மேம்படுத்துவதற்கு

நவீன தொழில்நுட்பவியலின் பரப்பெல்லைக்குள் தொடர்பாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், நுண்மின்னணுவியல், விண்வெளி தொழில்நுட்பம், மனித எந்திரவியல், ஒளிப்படவியல் மற்றும் புதிய சாதனங்கள் என்பன உள்ளடங்கும்.

தொலைநோக்கு

பிராந்தியத்தில் நவீன தொழில்நுட்பவியலில் முன்னணி புத்தாக்க நிலையமொன்றாகுதல்.

செயற்பணி

புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பயிற்சி, கைத்தொழில் சேவைகள் மற்றும் சர்வதேச கூட்டுழைப்புக்கள் என்பனவற்றினூடாக அக அடிப்படையிலான நவீன தொழில்நுட்ப செயற்றிறன்களை விருத்திசெய்தல், வளர்த்தல் மற்றும் துணைமையாக இருத்தல்.

ஆளுகை அமைச்சு

விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி, திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு.

ஆளுனர் சபை உறுப்பினர்கள்

1.	பேரா. கமால் டீன்	தலைவர் (2017 ஜனவரி – 2917 ஒக்டோபர்)
2.	பேரா. டீ.ஏ. தந்திரிகொட	தலைவர் (2017 நவம்பர் இலிருந்து)
3.	எந்திரி. சனத் பனவென்னகே	பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேட்ட நிறைவேற்று அலுவலர் – உறுப்பினர், ஆளுனர்கள் சபை
4.	பேரா. எ.கெ.டபிள்யூ. ஜயவர்தன	உறுப்பினர், ஆளுனர்கள் சபை (2017 ஒக்டோபர் வரை)
5.	பேரா. கே.கே.சீ.கே. பெரேரா	உறுப்பினர், ஆளுனர்கள் சபை (2017 டிசம்பர் இலிருந்து)
6.	திருமதி. எஸ்.ஏ.சி. குலதிலக	உறுப்பினர், ஆளுனர்கள் சபை (2017 ஜூன் வரை)
7.	பேரா. (திருமதி). திலிகா டயஸ்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
8.	பேரா. சந்தன ஜயரட்ன	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
9.	திரு. அஸ்லி டீ. வொஸ்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
10.	திரு.கே.எம்.சி. பர்ணாந்து	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
11.	பேரா. பீ.எஸ்.எம். குணரட்ண	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
12.	பேரா. காமினி செனநாயக்க	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
13.	திரு. எம்.ஏ.எஸ். வீரசிங்க	உறுப்பினர், ஆளுனர்கள் சபை (2017 நவம்பர் இலிருந்து)
14.	திருமதி. வசந்தா பெரேரா	உறுப்பினர், ஆளுனர்கள் சபை (2017 நவம்பர் இலிருந்து)

2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சபை கூட்டங்களின் எண்ணிக்கை

சபை கூட்டத்தின் இலக்கம்	கூட்டம் இடம்பெற்ற திகதி
2017/01	19/1/2017
2017/02	16/2/2017
2017/03	16/3/2017
2017/04	27/4/2017
2017/05	18/5/2017
2017/06	15/6/2017
2017/07	20/7/2017
2017/08	17/8/2017
2017/09	21/9/2017
2017/10	19/10/2017
2017/11	16/11/2017
2017/12	21/12/2017

2.0 நிறைவேற்றுனர் பொழிப்புரை



மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் நிறுவகமானது, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்பவியல் சேவைகள், பயிற்சி மற்றும் உசாவுத்துணை சேவைகள் ஆகிய பரப்பெல்லைகளில் குறிப்பிட்டு சொல்லத்தக்களவு முன்னேற்றத்தை தரக்கூடியவகையில் செயலாற்றியதுடன், தேசிய ரீதியில் தொழில்நுட்பவியல் செயற்றிறனை விரிவுபடுத்தக்கூடியவகையில் சிறந்த பங்களிப்பையும் வழங்கியது. எனினும் இத்தகைய சிறந்த மட்டத்தை நிறுவகம் சாதித்தபோதிலும் நிறுவகத்தை தொடர்ச்சியாகவே பாதித்துக்கொண்டுவரும் முதல் நிலை பிரச்சனையானது, ஆட்சேர்ப்பும் தடுத்து நிறுத்தலும் ஆகும். அதாவது, நிறுவகத்தின் செயற்பாடுகளில் பிரதான இடத்தை வகிக்கின்ற ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பவியல் பதவிநிலைகளுக்கு பொருத்தமானவர்களை ஆட்சேர்ப்பு செய்ய இயலாத நிலைக்கு நிறுவகம் உட்படுவதற்கு காரணமாக அமைவது குறைந்த வேதனம் மற்றும் நிர்வாக நீதி ரீதியிலான வரையறைகள் என்பனவாகும். இந்த சிக்கல் மிகுந்த நிலையானது நிறுவகத்தின் செயற்பாடுகளின் வினைத் திறனை பெரிதளவில் பாதிக்கின்றது.



இவ்வருடத்தில் ஆற்றப்பட்ட மிகப்பெரிய சாதனையாக கருதப்படுவது, ஜப்பான் நாட்டினை சார்ந்த கியூசு தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் தொழில்நுட்பவியல் கூட்டிணைவுடன் வடிவமைக்கப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நெநோ சென்மதி ஆகும். விண்வெளி தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கை மென்மேலும் செயல் வல்லமையை பெற்றுக்கொண்டு அத்துறையினை இன்னும் விருத்திசெய்துகொள்ளல் வேண்டும் என்ற நோக்குடன் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க்கின் நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் உள்ளடக்கப்பட்ட இந்த நெநோ சென்மதி விருத்தித் திட்டமானது, இலங்கை சார் எந்திரிகளால் விருத்திசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு இதுவே இலங்கையில் முதன்முதலாக விருத்திசெய்யப்படும் சென்மதியாகும்.

விண்வெளி தொழில்நுட்ப செயற்றிறன் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டமானது ரஷ்ய சம்மேளனத்துடனிருந்த கூட்டிணை முயற்சிகளில் குறிப்பிடும்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க் நிறுவகத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோர்களினை உள்ளடக்கிய குழாமினர் ரஷ்ய சம்மேளனத்திற்கு விஜயம் செய்தபோது, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க்கின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம், ரஷ்ய சம்மேளனத்தின் அரச விண்வெளி கூட்டுத்தாபனம் (ROSCOSMOS) மற்றும் சமரா அரச விண்வெளி பல்கலைக்கழகம் (SSAU) ஆகிய இரு நிறுவனங்களுடனும் இரு புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டனர். இதனைத்தொடர்ந்து, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க்கின் நெநோ சென்மதி விருத்தி குழாமினைச் சார்ந்த 17 எந்திரிகள் அடங்கிய குழாமொன்று SSAU வினால் முன்னெடுக்கப்படவுள்ள ஒரு விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பயிற்றுவிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நில அவதானிப்பு சென்மதி தரவுகளினை பெற்றுக்கொள்வதற்கும் விநியோகிப்பதற்கும் ஒரு தேசிய மைய நிலையத்தை தாபித்தல் தொடர்பிலான கருத்திட்டமானது 2017 ஆம் ஆண்டில் சிறந்த முன்னேற்றத்தை கண்டது. இந்த நிலையத்தை தாபிப்பதற்கு 15 ஏக்கர் நிலப்பரப்பானது ஹோமகம, ஹொரகல எனும் இடத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாண பிரதான திட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப நகர் (Tech city) வளாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் நிறுவகமானது, அநேகமான வாடிக்கையாளரினால் முன்வைக்கப்படும் தொழில்நுட்பவியல் பிரச்சனைகளுக்கு, வரை. மொபிடல் தனியார் நிறுவகத்துடனும் களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடனும் இணைந்து, மார்பு புற்றுநோய்க்கு கையடக்க தொலைபேசி பிரயோக பொதி, விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கான குறுந்தகவல் முறையினூடாக மழை வீழ்ச்சி பற்றிய தரவுகளை சேகரிப்பதற்கு ஒரு முறைமையை விருத்தி செய்தல், தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபைக்காக CCTV பாதுகாப்பு கண்காணிப்பு முறைமை மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலைக்காக வாகனத்தின் சுவட்டினையும் மற்றும் எரிபொருள் மட்டத்தினையும் கண்காணித்தல் போன்ற மிகச் சிறந்த தீர்வுகளை வழங்கினர்.

இதைவிட அநேகமான அக கருத்திட்டங்கள் வருடகாலப் பகுதியில் வெற்றிகரமாக பூரணப்படுத்தப் பட்டுள்ளன. இதற்குள் பூமத்திய ரேகை நாடுகளுக்கு பொருத்தமான உயர் செயலாற்றுகை எழுச்சி காப்பினை வடிவமைத்தலும் விருத்தி செய்தலும், தேயிலை நிறத்தினை வகைப்படுத்தும் முறைமை, RF-ID இனை பயன்படுத்தி நூலக செயன்முறை தன்னியக்கலாக்கம், UAV இறகுகள் பொருத்தப்படல், சகல நிலப்பரப்பிற்கும் ஏற்றவகையிலான rover, வேறுபட்ட பிரயோகங்களுக்கு டிரான்கள், தன்னியக்க நீர்ப்பாசன முறைமை மற்றும் வலையமைப்புடன் கூடிய நேர ஒத்தியக்க முறைமையை காட்சிப்படுத்துவதற்கு ஈதர் நெட்டை அடிப்படையாகக்கொண்ட காட்சி முறைமை என்பன உள்ளடங்கும்.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், வானியலாராட்சியுடன் தொடர்புடைய பிரதான ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மூன்று நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, “Light curve analysis of CC Andromeda” எனும் தலைப்பிலான ஒரு ஆராய்ச்சி கட்டுரையானது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 ஆம் ஆண்டிற்குரிய பட்டப்பின் படிப்பிற்கான ஆராய்ச்சி கருத்தரங்கில் பிரசுரிக்கப்பட்டது. இதைவிட ரஜரட்ட, கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள், பௌதிகவியலில் விசேட பட்டம் பயிலும் மாணவர்கள் மூவரின் இறுதி வருட கருத்திட்டங்களாவன நிறுவகத்தின் பிரிவுடன் தொடர்புடைய விஞ்ஞானிகளால் கண்காணிக்கப்பட்டது.

மேலும், இலங்கையின் வரைபடத்தினுள் உள்ளடக்கப்படும் நிலம் மற்றும் சிறிய அளவிலான நிலம் ஆகியவற்றின் பாவனைக்கு, ஒழுங்கிணைக்கப்பட்ட உயர் நிறமாலைமான மற்றும் பல்காலம் சார் பல் நிறமாலை மான சென்மதி விம்பத் தரவுகளின் செயலூட்டற்றிறன் மிகு பாவனை, ... மற்றும் உயர் நிறமாலை மான சேய்மை உணரியினை பயன்படுத்தி சதுப்பு நிலக் காட்டு இன வகைகளை இனம் காணல் எனப்படும் மூன்று ஆராய்ச்சி கருத்திட்டங்கள் விண்வெளி தொழில்நுட்ப பிரயோக பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கைத்தொழிற்துறைக்கு நிறுவகத்தினால் வழங்கப்படும் மின்னியல் மற்றும் மின்னணுவியல் சோதனைகள், அளவீட்டு கருவிகளின் தரங்கணிப்பு, வேறுபட்ட மின்னணுவியல் கருவிகளின் செயலாற்றுகை சோதனை, துணையுறுப்புகளும் கூறுகளும் ஈய அமில மின்கலங்கள் மற்றும் எழுச்சி காப்பு கருவிகள், தொடர்பாடல் நிமித்தம் வழங்கப்படும் சோதனை மற்றும் அளவீட்டு சேவைகள் மற்றும் வலு மற்றும் ஒலிபரப்பல் துறைக்கு வழங்கப்படும் உசாவுத்துணை சேவைகள் போன்ற சேவைகளுக்கு குறிப்பிட்டு சொல்லத்தக்களவு கேள்வி கைத்தொழிற்துறையில் உள்ளது. 2017 ஆம்

ஆண்டு காலப்பகுதியில் கிட்டத்தட்ட 370 செயலாற்றுகை சோதனை அறிக்கைகளும் கிட்டத்தட்ட 125 கருவி தரங்கணிப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதைவிட குறிப்பிட்டு சொல்லத்தக்களவு எண்ணிக்கையான, உசாவுத்துணை சேவைகள், அளவீட்டு மற்றும் உயர் வன்பொருள் மீட்பு பணிகள் என்பன நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய சேவைகள் வழங்கப்பட்டன.

மேலும் நிறுவகமானது எந்திரவியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் அரச தனியார் அமைப்பாண்மைகளைச் சார்ந்த தொழில்சார்பியலாளர்கள் என்போரை இலக்காகக்கொண்டு செய் நிரலாக்க சுருக்க கட்டுப்படுத்தி, உட்பதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமை, மின்னணுவியல், தொடர்பாடல் மற்றும் வானொலி அதிர்வெண் முறைமை பற்றிய பயிற்சிப்பட்டறை மற்றும் புவி விஞ்ஞான முறைமை போன்ற நான்கு வகையினைச் சார்ந்த தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. மேலும் பள்ளிக்கூட மாணவர்களையும் ஆர்வலர்களையும் குறிப்பாக கருத்திற்கொண்டு வானியலாராய்ச்சி மற்றும் மின்னணுவியல் தொடர்பில் இரு நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவகம் நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கேள்வி கணிசமான அளவில் தொடர்ச்சியாகவே இருந்து வந்தது என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு 138 தொழில்சார்பியலாளர்களும் 120 பள்ளிக்கூட மாணவர்களும் மற்றும் ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

எந்திரி சனத் பன்னவென்னகே
பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேட்ட நிறைவேற்று அதிகாரி.

3.0 நிறுவகத்தின் பிரிவுகள்


- மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவு
- தொடர்பாடல் பிரிவு / மனித எந்திரவியல் பிரிவு
- கைத்தொழில் சேவைகள் பிரிவு
- விண்வெளி தொழில்நுட்ப பிரயோக பிரிவு / விண்வெளி தொழில்நுட்ப பிரிவு / வானியலாராய்ச்சி பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு
- நிர்வாக, நிதி மற்றும் மனித வள பிரிவு

4.0 தேசிய முக்கியத்துவம் மிகு கருத்திட்டங்கள்

நெநோ சென்மதி கருத்திட்டம்

இலங்கையின் விண்வெளி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ரஷ்யாவின் ஆதரவுடன் ஒரு 3U நெநோ சென்மதியினை வடிவமைத்து விருத்தி செய்கின்ற முயற்சியில் முன்னெடுக்கப்பட்ட சில வெற்றிகரமான செயற்பாடுகள் என்பனவற்றுடன் இணைந்த வகையில் பல சாதனைகள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டன.

விண்வெளி தொழில்நுட்பத்தில் தேசிய செயற்றிறனை விருத்தி செய்தல் வேண்டும் என்பதனை தனது பணிப்பாணையாகக் கொண்ட நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் விண்வெளித் துறையில் இலங்கையின் தேசிய செயற்றிறனை விருத்தி செய்வதற்கு, அதே துறையில் உயர் தொழில்நுட்பவியல் திறனுடைய தேசிய நிறுவகங்களுடன் பயனுறுதி மிக்க கூட்டிணைவுகளினை தாபிப்பதற்கான அவசியத்தினை கருத்திற்கொண்டு ரஷ்ய அரச விண்வெளி கூட்டுத்தாபனத்துடனும் (ROSCOSMOS) மற்றும் ரஷ்ய சம்மேளனத்தின் சமரா தேசிய ஆராய்ச்சி பல்கலைக்கழகத்துடனும் (SNRU) பல கூட்டிணை முயற்சிகளினை ஆரம்பித்துள்ளது.



அதி மேதகு சனாதிபதி அவர்கள் ரஷ்யாவிற்கு முன்னெடுத்த இராஜாங்க விஜயத்தை தொடர்ந்து விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் ரஷ்யாவிலுள்ள ROSCOSMOS இற்கும் SNRU விற்கும் 2017, மார்ச் மாதம் 26 – 29 ஆம் திகதிகளின் போது விஜயம் செய்தமையானது, மேற்கூறப்பட்ட இரு நிறுவனங்களுடன் நெருங்கிய மற்றும் வலுவான தொடர்பினை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தது. இது விண்வெளி தொழில்நுட்ப செயற்றிறன் விருத்தியில் குறிப்பிட்டு சொல்லத்தக்களவிலான முன்னேற்றத்தை சாதிக்கக்கூடியதாகிற்று.

கௌரவ அமைச்சரின் விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களின் பிரதான பெறுபேறுகள் வருமாறு.

- சமரா தேசிய ஆராய்ச்சி பல்கலைக்கழகத்துடன் இணைந்து நெநோ சென்மதியினை விருத்தி செய்தல், உசாவுத்துணையை பெற்றுக்கொள்ளல், சோதனை வசதிகளினை முன்னெடுத்தல்.
- நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கினால் விருத்தி செய்யப்பட்ட முதலாவது நெநோ சென்மதியினை ரஷ்ய அரச விண்வெளி கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் விண்கல புறப்பாடு செய்வதற்கான வசதி.

கருத்திட்டத்தின் வளர்ச்சி தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் முன்னெடுத்துச் சென்ற நடவடிக்கைகளின் விபரங்கள் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களாவன தொடரப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் "நெநோ சென்மதியினை பற்றிய முதலாவது முறைசார் பயிற்சிப் பட்டறை" முன்னெடுக்கப்பட்டது. நெநோ சென்மதியினை வடிவமைத்தல், சோதித்தல் மற்றும் விண்கல புறப்பாடு என்பவை தொடர்பிலான அடிப்படை தகைமை விருத்திகளை மேற்கொள்ளல் என்பன கருத்திட்டத்தின் 2வது கட்டத்தில் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஒரு சிரேட்ட மற்றும் ஒரு கனிஷ்ட குழாமானது ரஷ்யாவிலுள்ள சமரா தேசிய ஆராய்ச்சி பல்கலைக்கழகத்திற்கு முறையே இரண்டு கிழமை மற்றும் ஒரு மாதத்திற்கு விஜயம் செய்தது. கருத்திட்டத்தின் தொழில்நுட்பவியல் குழாமின் கனிஷ்ட உறுப்பினர்களுக்கு "நெநோ சென்மதியின் அடிப்படை வடிவமைப்புகள்" எனும் பொருள் தொடர்பில் விரிவான விசேடத்துவமானதொரு பயிற்சி வழங்கப்பட்ட அதே வேளையில் கருத்திட்டத்தின் தொழில்நுட்பவியல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லும் சிரேட்ட உறுப்பினர்களுக்கு, சென்மதி வடிவமைப்புடன் தொடர்புடைய முக்கிய தொழில்நுட்பங்கள் தொடர்பில் போதுமானளவில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.




கனசதுர வடிவ சென்மதியொன்றினை இலங்கையில் முதலாவதாக வடிவமைத்தல், விருத்தி செய்தல் மற்றும் புறப்படச் செய்தல்

இலங்கையின் முதன்முதலான IU கனசதுர வடிவ சென்மதியினை வடிவமைத்தல் மற்றும் அதனது IU உப முறைமையினை விருத்தி செய்தல் ஆகிய பணிகளாவன நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கினை சார்ந்த இரு எந்திரிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த கருத்திட்டமானது ஜப்பானினைச் சார்ந்த குயூசு தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் JAXA யின் உதவியுடன் இந்த விண்கலம புறப்பாடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கணணி உப பிரிவு, தொடர்பாடல் மற்றும் ஆன்டெனா உபமுறைமை, காந்த உணரி ஒன்றினை இணைத்தல், தரவுக் களஞ்சியம் மற்றும் விம்பத்தை காட்டும் கருவி என்பன இந்த கனசதுர சென்மதி தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற கட்டங்களாகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பணி வரையறை மீளாய்வு பூரணப்படுத்தப்பட்டுள்ளது.







நில அவதானிப்பு சென்மதி தரவுகளை பெற்றுக்கொள்வதற்கும் விநியோகிப்பதற்குமான தேசிய மையம் ஒன்றை தாபித்தல்



நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் வினைத்திறன் மிகுந்த வள திட்டமிடுகை மற்றும் முகாமைத்துவ கருவி என்றவகையில் நில அவதானிப்பு மற்றும் சேய்மை உணரி (RS) தரவுகளினை பயன்படுத்துதலில் தடையேற்பட ஏதுவாக இருந்தமை, நியாயமானதொரு விலையில் RS தரவுகள் கிடைக்கப்பெறாது இருந்தமை மற்றும் இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைப்பாண்மைகளில் இந்தத் தரவுகளையும் மற்றும் இதற்குரிய பிரயோக பொதியினையையும் பயன்படுத்துவதில் உரிய கூட்டுழைப்பு கிடைக்கப்பெறாமை என்பனவாகும். இது இவ்வாறு தொடரப்பட்டால் நாட்டில் விண்வெளி அபிவிருத்தியினை முன்னெடுப்பதற்கு பெரியதொரு தடங்கலாக அமையும்.

இந்த கருத்திட்டத்தின் நோக்கானது, நாட்டின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு தரவுகளை ஏனைய அமைப்பாண்மைகளுக்கும் ஒரு நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல் ஆகும். இது தொடர்பில் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவானது 2013 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டில் 15 ஏக்கர் விஸ்தீரணத்தைக்கொண்ட நிலப்பரப்பானது, நகர அபிவிருத்தி சபையினது மேல் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் ஹோமகலவிலுள்ள ஹொரகல எனும் பிரதேசத்தில் இருப்பதுமான தொழில்நுட்ப நகர் (Tech City) வளாகத்தில் ஒதுக்கப்பட்டது.

கம்பியில்லாத பாதுகாப்பான தரவு உட்புகுகை



2015 ஆம் ஆண்டு, செயற்றிறன் அதிகரிக்கப்பட்ட நினைவூட்டற் சில்லுடன் கூடிய RMS மின்வலியளவு பதிலியானது, இலங்கை அரச பாவனைகள் ஆணைக்குழுவிற்காக தயாரிக்கப்பட்டது என்பதுடன், 2016 ஆம் ஆண்டில் சேய்மை கண்காணிப்பு செயற்றிறனும் மேலும் பல உயர் சிறப்பம்சங்களும் கூடியதொரு உட்புகுகையும் விருத்தி செய்யப்பட்டது.

தற்போது செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருத்திட்டமானது, இன்னுமோர் பாதுகாப்பு படலத்தினை சேர்க்கப்பட்டதன் மூலம் மென்மேலும் பாதுகாப்பான முறையில் தரவுகள் மாற்றீடு செய்யப்படுதலினை இலக்காக கொண்டுள்ளதுடன் பாவனையாளர் மற்றும் உட்புகுகையாளர் ஆகிய இருவரிடையே இரு வழி தொடர்பாடல் முறைகளினை கொண்டுள்ளது.

இந்த முறைமையின் கீழ் பாவனையாளர் தமது தேவைப்பாடுகளுக்கு அமைவுற பதிவு செய்யும் சாராமாறிகளினை வேற்றுமைப்படுத்திக் கொள்ளலாம். மேலும், தரவுகளை களஞ்சியப்படுத்தல் எனும் விடயம் தொடர்பில் நோக்கினால், உட்புகுகை மற்றும் சேமிப்பகம் எனும் இரண்டிற்கும் இடையிலான தொடர்பிணைப்பில் வழு ஏற்பட்டால் அந்த வழு திருத்தப்படும்போது உட்புகுகை மற்றும் சேமிப்பகம் எனும் இரண்டிற்கும் இடையிலான தரவு மாற்றீடு மீண்டும் பழைய நிலையிலிருந்து புதுப்பிக்கப்படும்.

சார்க் சென்மதி பெறுகை வசதிகளினை தாபித்தல்



சார்க் சென்மதியானது (புவி நிலையம்) அறிமுகப்படுத்தப்பட்டதோடு தற்போது அது சார்க் உறுப்புரிமை நாடுகளிற்கு அனுகூலங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு செயற்படுவதோடு, இலங்கைக்கான சேவையை வழங்கும் பொறுப்பானது நவீன ஆர்தர் சி. கிளார்க்கிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு மத்திய இடத்திலிருந்து சேய்மை உணரி மூலம் தொடர்பினை ஏற்படுத்தி சிறந்த சேவைகளை அதாவது தொலைக்கல்வி, சேய்மை இணையம், சேய்மை தரவு இணைப்பு போன்ற சேவைகளை அரச நிறுவனங்கள், கல்வியியற் தாபனங்கள் மற்றும் சமூகத்திற்கு வழங்குவதற்கு தேவையான முறைமைகள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும்.

5.0 ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்


5.1 எந்திரவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கைத்தொழிற் துறையினை நோக்காகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்

“மார்பு புற்றுநோய் பராமரிப்பு” கையடக்க தொலைபேசி பிரயோக பொதியின் விருத்தி



“மார்பு புற்றுநோய்” பராமரிப்பு தொடர்பில் விருத்தி செய்யப்பட்ட இந்த விரிவான கையடக்க தொலைபேசி பிரயோக பொதியினை நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் வரை. மொபிடெல் (தனியார்) நிறுவகத்துடனும் களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடனும் இணைந்து விருத்தி செய்துள்ளது. இந்த கையடக்க தொலைபேசி பிரயோக பொதியானது, நோய் பற்றிய விழிப்புணர்ச்சியினை நோயாளியிடத்து மேம்படுத்தல், வைத்தியசாலைக்கு மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு விஜயம் செய்யும் நோயாளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியினை ஏற்படுத்தல், பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பில் ஓர் அடிச்சுவட்டினை பேணல் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பில் ஒரு தரவுகளை பெற்றுக்கொள்ள வழிவகுத்தல் போன்ற இதர பலவற்றிற்கு சேவைகளை வழங்கக்கூடியதாக இருக்கின்றது. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்தப் பொதி அறிமுகப்படுத்தப்பட்டது.

மழைவீழ்ச்சி பற்றிய தகவல்களை குறுஞ் செய்தி மூலம் சேகரிப்பதற்கு ஒரு முறைமையை விருத்தி செய்தல்



விவசாய திணைக்களத்திற்காக விருத்தி செய்யப்பட்ட இந்த முறைறையின் மூலம், குறுஞ்செய்தியின் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டு தன்னியக்கமாகவே தரவுத்தளத்திலும் இற்றைப்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்டவரினால் இணையத்தின் ஊடாக இந்த தரவுத்தளத்தில் உள்ள தகவல்களை நோக்க முடியும் பாவனையாளரின் தேவைக்கு அமைவுற இந்தத் தரவுத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய தரவுகளின் துணையுடன் அறிக்கைகளை தயாரித்தல் இயலும். இந்த முறைமையின் துணையுடன் ஆவணங்களினை வினைத்திறமையுடன் தயாரிக்கும்போது முகம் கொடுக்கப்படக்கூடிய சிக்கல்களினை தீர்க்கக்கூடியவகையில் புதிய முறைமையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்காக CCTV பாதுகாப்பு நுண்ணாய்வு முறைமை விருத்திசெய்யப்படல்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினைச் சார்ந்த அம்பத்தலே, பியகம, தெலவல, இரத்மலானை எனப்படும் 04 களங்களில், இந்த பாதுகாப்பு முறைமையினை வடிவமைத்து தாபித்தலே இந்த கருத்திட்டத்தின் நோக்காகும். இந்த பாதுகாப்பு முறைமை மேற்கூறப்பட்ட 4 இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. நிறுவகத்தின் தொடர்பாடல் பிரிவினால் இந்தக் கருத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குழு முகாமைத்துவம் நிமித்தம் வாகன செல்வழி மற்றும் எரிபொருள் மட்டம் கண்காணிக்கப்படல்

போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களின் செல்வழி மற்றும் அதனது நிறுத்தற் நேரங்கள் போன்றவற்றை தெளிவாக அறிந்துகொள்ளும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட இந்த முறைமையானது வாகனத்திலுள்ள எரிபொருள் மட்டத்தினையும் எரிபொருள் உணரியினை பயன்படுத்தி அறிந்துகொள்வதற்கு ஆதாரமாக இருக்கும். அகரீதியில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்காக தயாரிக்கப்பட்ட இந்த இரு முறைமைகளும் தற்போது பூரணப்படுத்தப்பட்டு செயற்பாட்டிலுள்ளது.



5.2 எந்திரவியல்/தகவல் தொழில்நுட்பத்தில் அக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்

பூமத்தியரேகை மண்டல நாடுகளுக்கு பொருத்தமான உயர் செயலாற்றுகையுடனான எழுச்சி காப்புக் கருவி

வெளியிலிருந்து ஒரு குறுகிய நேரத்திற்குள் திடீரென்று வரக்கூடிய மின் எழுச்சியிலிருந்து, மின்னணுவியல் முறைமையினை பாதுகாப்பதற்கு ஒரு கருவியினை வடிவமைத்து விருத்தி செய்து வழங்கலே இந்த கருத்திட்டமாகும். இந்தக் கருவியானது இலங்கை





போன்ற பூமத்திய ரேகை நாடுகளுக்கு மிகவும் பொருத்தமாகும். இந்த கருவியின் மூலவகை மாதிரி விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், வேறுபட்ட முறைகளில் இதனை பாவிப்பதற்கு மேற்போந்த பரிசோதனைகளினை முன்னெடுக்க கருவியானது ஆய்வுகூடத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த கருவியினை பொதுமுறையில் பாவிப்பதற்கு ஏற்ற வகையில் தற்போது வடிவமைப்பு செய்யப்படுவதுடன் இதற்கான மூலவகை மாதிரியின் பூர்வாங்க நிலையானது தற்போது நடைமுறையில் முன்னெடுக்கப்படுகிறது.

ஈதர் நெட் மீதான வலு

இந்தக் கருத்திட்டத்தின் இலக்கானது, கணணி வலையமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட நேரத்தை காட்டுவதற்கு ஈதர் நெட்டினை அடிப்படையாகக்கொண்ட காட்சிப்படுத்தல் முறையினை வடிவமைப்பு செய்தலாகும்.



தன்னியக்க நீர்ப்பாசன முறைமை

இந்த முறைமையானது, மண்ணின் ஈரப்பதனை அளவிடுவதுடன் நீர் பாயும் வேகத்தினையும் தேவைக்கு ஏற்ற மட்டத்திற்கு கட்டுப்படுத்துகிறது. தன்னியக்க நீர்ப்பாசன முறைமையினை பயன்படுத்துவதன் மூலம் குறைந்த தாவர வளர்ப்பு செயன்முறையில் தொழிலாளர் செலவினத்தை குறைக்கலாம். மேலும் முறையாக வடிவமைக்கப்பட்ட நீர்ப்பாசன முறைமையினை பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் அதி குறைந்த அளவிலான நட்டத்தில் குறிப்பாக நீர் அநாவசியமாக வழிந்தோடல், விரயமாகுதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டு நீரை வினைத்திறனுடன் பாவிக்க இயலும்.

ஈதர் வேறுபட்ட பிரயோகங்களின் நிமித்தம் டிரான் (Drone) ஒன்றினை வடிவமைத்து விருத்தி செய்தல்

முன்னைய வருடத்தில் அதாவது 2017 ஆம் ஆண்டில் டிரான் தொழில்நுட்பம் பற்றி பெற்றுக்கொண்ட செயல்முறைசார் தொழில்நுட்ப அறிவினை பயன்படுத்தி, விம்பலாக்கம், விளம்பரப்படுத்துகை, காணொளி, கண்காணிப்பு, வடிவமைப்பு, விருத்தி மற்றும் பறத்தல் பற்றிய பூர்வாங்க சோதனை, சுமை தாங்குதல் ஆகியவை தொடர்பிலான பண்புக்கூறுகள் உள்ளடக்கப்பட்டு அறு பாகத்தைக் கொண்டதும் 5 kg சுமையை ஏற்றக்கூடியதுமான இரு டிரான்கள் வடிவமைக்கப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒளிப்பட அளவியல், புவியியல் மேட்டுப்பரப்புகள் பற்றிய டிஜிட்டல் தரவுகள் என்பவை தொடர்பிலான விருத்தி முயற்சிகள் அடுத்த வருடம் முன்னெடுக்கப்படும்.





Xilinx FPGA யினை அடிப்படையாகக் கொண்டு தேயிலையின் நிறத்தை வகுப்புப்படுத்தும் முறைமை



கட்டம் 1 வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து (கருதுகோள் நிரூபணமாகுதல்) Xilinx FPGA விம்ப செயன்முறையாக்கம் மற்றும் பதிப்புரு 1 இல் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் எனும் விடயத்தை உள்ளடக்கிய கட்டம் 2 தற்போது நடைமுறையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மின்னணுவியல் முறைமை விருத்தியானது தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. தேயிலை துகள்கள் விழுதல் போன்ற எந்திரவியல் அபிவிருத்திகளாவன இன்னும் பூரணப்படுத்தப்படவேண்டிய நிலையில் உள்ளது.

RF - ID இனை பயன்படுத்தி நூலக தன்னியக்கவாக்கம்




நூலகத்தின் செயற்பாடுகளை தன்னியக்கமாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு, தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி இந்த அடையாள ஒட்டு முறைமையானது புத்தகங்கள் மற்றும் பாவனையாளர்கள் ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த முறைமையானது பரீட்சார்த்த மட்டத்தில் பூரணப்படுத்தப்பட்டிருப்பதுடன் தற்போது நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதோடு முறைமை தரவுகளை உட்புகுத்தும் செயன்முறையானது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

UAV நிலையான இறகின் வடிவமைப்பும் விருத்தியும்

விவசாயம், அளவளாய்வு, காட்புயல் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற இதர பல விடயங்களைச் சார்ந்த வேறுபட்ட பிரயோகங்களில் உரிய சுமையுடன் 3D மாதிரிகள் மற்றும் ஒளிச் செறிவளவை என்பனவற்றிற்கு பயன்படுத்தக்கூடிய வகையில் கட்டுப்படியாகக்கூடிய விலையில் UAV வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்வதற்காக இக் கருத்திட்டம் தொடங்கப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில் UAV வின் பாவனைக்கு அதிக செலவினம் மற்றும் உயர்திறன் மிக்க தொழிலாளர் தேவைப்படுவதினால் தன் பாவனையானது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் நோக்கானது சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படும் அளவிற்கு அக UAV பாவனையை மேம்படுத்தல் ஆகும். சாரதியின்றி செல்லும் பாதை தீர்மானிக்கப்படும் வகையில் வேறுபட்ட வகையினைச் சார்ந்த UAV கள் குறைந்த விலையில் விருத்தி செய்யப்பட்டன.

UAV பதிப்புரு – I ஆனது பூரணப்படுத்தப்பட்டு அதனை செயல்முறை சார்ந்த ரீதியில் விளக்கமளிப்பதற்கான திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டன. தற்போது விருத்தி செய்யப்படுகின்ற UAV ஆனது, தெரிவுசெய்யப்பட்ட நேரத்திற்குள் சாரதியின்றி தன்னியக்க நகர்விற்கும் மனிதனால் கட்டுப்படுத்தப்படுவதற்கு ஏற்ற வகையில் விருத்தி செய்யப்படுகிறது.


சகல வகையான நிலப்பரப்புகளிலும் பயணம் செய்யக்கூடிய வகையிலான Rover Platform (6X6)



சகல வகையான நிலப்பரப்புகளிலும் அதாவது கரடுமுரடான மற்றும் உயர் மேடு பள்ளமான நிலப்பரப்புகளில் பயணம் செய்யக்கூடிய வகையிலான Rover Platform. இது நீர் புக வழி அளிக்காததொன்றாகும் என்பதோடு இதன் அக சாரா மாறிகள் சேய்மை உணரி ஒன்றின் மூலம் அவதானிக்கப்படும்.

மனித எந்திரவியலினை பயன்படுத்தி தன்னியக்கமாக செல்லக்கூடிய இந்த Rover இல் 2D Laser ranger finder தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன் இத் தொழில்நுட்பமே வரைபடமிடலிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்பாட்டு முறைமை (ROS)

இந்த முறைமையின் மூலவகை மாதிரியின் விருத்தியானது தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன்

காடுகள் மற்றும் கண்ணி செடிகளினை அகற்றல் போன்ற செயற்பாடுகளில் மனிதனின் சம்பந்தப்படுகை இன்றி இதனை பயன்படுத்துவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

RF கதிர்வீசல் அளவீட்டு அளவளாய்வு மற்றும் அறிக்கை தயாரிப்பு

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கானது தற்போது, அயனாகள் அல்லாத கதிர்வீச்சு பாதுகாப்பு பற்றி சர்வதேச கட்டளைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவுற பொதுமக்களில் RF தாக்கம் எந்தளவு தூரத்திற்கு தாக்கியுள்ளது என்பதனை பற்றிய அளவளாய்வில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பில் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமானது கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுடன் கூட்டிணைய உத்தேசித்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA)


தொலை தொடர்பாடல் ஒழுங்குவிதிகள் ஆணைக்குழு (TRC)


உலக சுகாதார அமைப்பாண்மைm (WHO)

இலங்கையில் சகல 25 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 154 பிரதான நகர்களில் இந்த அளவளாய்வு முன்னெடுக்கப்படும். தற்போது கருத்திட்டமானது தரவு சேகரிப்பு செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.









தகவல் முறைமை அபிவிருத்தி கருத்திட்டங்கள்

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கிற்கு ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமை

நிறுவகத்தின் அக நிர்வாக செயன்முறையின் வினைத்திறனை மேலும் மேம்படுத்த 2017 ஆம் ஆண்டில் கீழ்குறிப்பிடப்பட்ட மென்பொருள் முறைமை மேலும் விருத்திசெய்யப்பட்டது.

- பொது முகாமைத்துவ முறைமை
- தரங்கணிப்பு முகாமைத்துவ முறைமை
- கருத்திட்ட பதிவு முறைமை
- கருவி பேணல் முறைமை
- சம்பள பட்டியல் முறைமை
- விடுமுறை மற்றும் வருகை முறைமை
- கணக்கியல் முறைமை
- வாகன நகர்வு மற்றும் பேணல் முறைமை
- விலை விபர பட்டியல் முறைமை
- தனிப்பட்ட தகவல்களும் சபை கூட்டங்கள் பற்றிய தகவல்களும்

வலு மின்னணுவியல் அளவீட்டு ஆய்வுகூடத்தின் தரத்தை உயர்த்துதல்

SLS1126 இன் நிபந்தனைகளுக்கு அமைவுற, மின் கலங்களின் சுழற்சிப்படுத்தல் சோதனையினை ஆரம்பித்தல்



ஒரு திறந்த சுற்றமைப்பில், ஒரு மின்கலத்தில் தொடர்ச்சியாக மின்னேற்றுதல் மற்றும் மின்னிறக்கம் அத்துடன் அதனது நீளமான ஓய்வுகாலம் என்பனவற்றை சோதித்தலையே சுழற்சி சோதனை எனப்படும். ஒரு மின்கலத்தின் இந்த செயற்றிறனானது, ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் அந்த மின்கலத்தின் சுழற்சி மற்றும் நீளமான ஓய்வு காலங்கள் என்பனவற்றின் மூலம் துணியப்படுவதோடு இச் சோதனையின் மூலம் செயற்றிறன் செயலாற்றுகை என்பன தீர்மானிக்கப்படும்.

பாரமான பொருட்களை நகர்த்துவதற்காக நகர்த்தல் மேசை ஒன்றினை வடிவமைத்தல்

இது பாரமான பொருட்களை மேலும் கீழும் நகர்த்துவதற்காக தன்னியக்கமாக இயங்கக்கூடியதொரு மேசையாகும்.

5.3 வானியலாராய்ச்சியில் ஆராய்ச்சி கருத்திட்டங்கள்

பல நிற ஒளிமானி மற்றும் உயர் பிரித்தொகுப்பு நிறமாலைமானி ஆகியவற்றினை பயன்படுத்தி டெல்டா ஸ்கூட்டி வகை நட்சத்திரங்களின் அலைவுகளின் முறைமையை இனம் காணல்

SZ Lyn மற்றும் CC And எனப்படும் இரு டெல்டா ஸ்கூட்டி வகையினைச் சார்ந்த மாறத்தக்க நட்சத்திரங்கள் தொடர்பில் மௌன்ட் அபு ஆய்வு மையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. CC And இனது ஒளிமானி தரவுகளின் பகுப்பாய்வு பூரணப்படுத்தப்பட்டது. Royal Astronomical சஞ்சிகையின் மாதாந்த அறிவித்தல் பற்றிய ஆராய்ச்சி

ஆக்கமானது பூரணப்படுத்தப்பட்டு இணை எழுத்தாளர்களின் அபிப்பிராயங்களை பெறுதல் பொருட்டு சுற்றுக்கு விடப்பட்டது. CC And இன் தொடர்ச்சியான பகுப்பாய்வின் பெறுபேறானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 ஆம் ஆண்டின் கருத்தரங்கின் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சியில் பிரசுரிக்கப்பட்டது. SUPER WASP மற்றும் AAVSO இலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட SZ Lyn தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டது.


SU - UMA வகையினைச் சார்ந்த குள்ள ஒளிரி மீன் இனது super-hump மற்றும் கோளப்பாதை என்பனவற்றிற்கிடையிலான தொடர்பினை சபை ஆய்வு செய்தல்

நான்கு SU - UMA க்களின் மூல ஒளிமானி தரவுகளாவன, சீனாவிலுள்ள Unan ஆய்வு மையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது. SDSS0932 நட்சத்திரத்தின் பகுப்பாய்வு பூரணப்படுத்தப்பட்டதுடன் ஒளி மறைப்புக்கான பண்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அவதானிப்பு காலப்பகுதியின்போது, வெடிப்பதற்குரிய ஆதாரங்கள் எதுவும் பெறப்படவில்லை. J0711, J0426 மற்றும் LY UMA ஆகிய ஏனைய நட்சத்திரங்களின் தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. யுனான் ஆய்வுமையத்தை சார்ந்த கருத்திட்ட குழு உறுப்பினரான பேரா. சிஹிபின் டெய் அவர்களினால் விருத்தி செய்யப்பட்ட “Aper.cl” பற்றிய பகுப்பாய்வு ஆவணமானது LY UMA மற்றும் J0426 எனப்படும் நட்சத்திரங்களின் நிமித்தம் சோதிக்கப்பட்டதுடன் இந்த ஆவணமானது IRAF PHOT தரத்தினை விட 0.5 என்ற அளவிற்கு அளவில் பெரியதாகும். LY UMA தரவு பகுப்பாய்வின்போது super - hump கண்டுபிடிக்கப்பட்டது. நாம் எதிர்பார்த்தவாறு super - hump இன் காலப்பகுதியும் LY UMA இன் கோளப்பாதை காலப்பகுதியும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும். SU - UMA வகை நட்சத்திரங்களின் அக பண்பியற் கூறுகளினை அறிந்துகொண்டு பகுப்பாய்வு செய்வதற்காக இந்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டிற்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

NASA Kepler K2 தரவுகளினை பயன்படுத்தி M - வகையினைச் சார்ந்த குள்ள நட்சத்திரங்களினை சுற்றியுள்ள மேலதிகமான சூரிய கிரணங்களை ஆய்வு செய்தல்

இந்தக் கருத்திட்டத்திற்கான முதல் நிலைத் தரவானது புவியின் கோள் பாதையிலுள்ள விண்வி கலமான Kelper / k2 குழுவினரிடமிருந்து பெறப்பட்டது.

K2 குழுவினர் புவிக்கு அனுபப்பட்டனர் அத்திடன் எனைய நட்சத்திரங்களை சுற்றி கோள் இடமாற்ற சமிக்ஞ்சைகள் பெறப்படுகின்றதா என்பதை அறிய தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன K2 விஞ்ஞான செயற்பாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட, நேரம் பற்றிய தரவுகளிலிருந்து சமிக்ஞைகளை பிரித்தெடுக்க கருவுகள் சில வடிவமைக்கப்பட்டன. வானியல் கோள்களிளை ஆராய்வு செய்தல் தொடர்பில் ஆக்கங்களில் தரப்பட்ட குறித்துரைப்புக்கள் மற்றும் விபரங்கள் என்பனவற்றிக்கு அமைவுற இந்தக் கருவிகள் வடிவமைக்கப்பட்டன.



MCMC fitted light curve for K2-100. The blue
dotted curve is the theoretically derived curve while the Scatter points are the observed data points.

5.4 விண்வெளி தொழில்நுட்ப பிரயோகங்களில் ஆராய்ச்சி

இலங்கையில் சிறிய அளவுடைய நிலங்களில் பயன்படுத்துவதற்கும் மற்றும் வரைபடத்தில் காட்டப்படும் நிலங்கள் தொடர்பிலும் ஒருங்கிணைக்கப்பட்ட உயர் நிறமாலை மானம் மற்றும் பல்காலம் சார்ந்த பல் நிறமாலைமான சென்மதி விம்பத் தரவுகளினை சாத்தியம் மிகுந்த முறையில் பாவித்தல்

புவியின் தரை மற்றும் கடலோர பிரதேசத்தின் விம்பங்ளை சேகரிக்க பயன்படுத்தும் சென்மதியினை பயன்படுத்தி வளி மண்டல திருத்தம், நிலப்பகுதி திருத்தம், வரை படம் அமைத்தல், படிவங்களை மாற்றுதல், தரம் கணிப்பிற்கு உட் படாத பட்டைகள் bad line அகற்றுதல் மற்றும் புவி வடிவியல் திருத்தங்கள் என்பன 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கு செய்யப்பட்டன அக ரீதியல் வடிவமைக்கப்பட்ட மென் பொருளின் துணையுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான மேகரைப்பு மற்றும் விடப்பட்ட தகவல்களின் சேகரிப்பு என்பன பூரணப்படுத்தப்பட்டது நேரத் தொகுப்பு கையொப்ப செயன் முறை மற்றும் உயர் நிறமாலை தரவு bad line அகற்றல் என்பன செயலாற்றுகை செய்யப்பட்டது.

சேய்மை உணரி சுற்றாடல் தரவுகளையும் மற்றும் தரமுயர்த்தப்பட்ட regression trees களையும் பயன்படுத்தி தொற்று நோய்களுக்கான niche modeling ற்கான புவி பட வரைபியல் தகவல் முறைமை


தேசிய வானியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்திடமிருந்து (NASA) வேறுபட்ட பிரிகைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேய்மை உணரி தரவுகள் இந்த ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டன வறல் வலய மழை வீழ்ச்சி அளவீட்டு குழு (TRMM) 3B42, 10 நாட்களுக்கான விளைவளவுகள் 2015 – 2017 ஆகஸ்ட் வரையில் செயன் முறையாக்கம் செய்யப்பட்டது MODIS விளைவளவுகளை பயன்படுத்தி 8 நாட்களுக்கான வரைபடங்களும் NDVI வரைபடங்களும் 2017 சனவரி முதல் 2017 யூலை வரை மீள் நோக்கப்பட்டது மேல் மாகாணத்து நிலம் தொடர்பிலான வகைப்படுத்தல்களாவன பூரணப்படுத்தப்பட்டதுடன் MODIS வெப்ப அளவு மற்றும் NDVI என்பன 1000 m இலிருந்து 30m வரை இறக்கம் செய்யப்பட்டது ஆய்வின் பெறுபேறுகள் பிரசுரிக்கப்படவுள்ளது

உயர் நிறமாலை மான சேய்மை உணரியை பயன்படுத்தி சதுப்பு நில இனங்களை இனம் காணல்

சதுப்பு நில இனங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட அறுவகை இனங்களின் (கிண்ணை, Bruggaria sexangular, Bruggaria gimnorisa, Luminitzera racemosa, தாழை மரம் மற்றும் முட்செடிவகை) நிறமாலை கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டு அவற்றின் பகுப்பாய்வுகள் பூரணப்படுத்தப்பட்டன. தொடர்புடைய சுட்டிகள் சேகரிக்கப்பட்டன. (BGI, BRI, GI, GVI, LIC, LRI, MCAR, MVSR, NPCI, PRI and SR4). இதற்கான விம்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இது தொடர்பிலான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு உரிய தகவல்கள் பிரசுரிக்கப்பட்டதை தொடர்ந்து கருத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது.

உயர் நிறமாலைமான சேய்மை உணரியை பயன்படுத்தி சதுப்பு நில இனங்களை இனம் காணல்

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் வறட்சி பற்றிய வரைபடம் பெற்றுக்கொள்ளப்பட்டு பூரணப்படுத்தப்பட்டு பங்குதாரர் முகவராண்மைகளிடத்து சுற்று விநியோகம் செய்யப்பட்டது. கள தரவு சேகரிப்பு என்பதன் கீழ், நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 265 மாதிரிகள் விவசாய நிலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.



5.5 ஆக்கவுரிமைகளும் பிரசுரிப்புகளும்

“True Root Mean Square Voltage Recorder with Enhanced Memory” என்பதற்கான ஆக்கவுரிமையானது இலங்கையினைச் சார்ந்த தேசிய அதி புலமை சொத்து அலுவலகத்தினால் வழங்கப்பட்டது.





ஜெ.பி.டி.எஸ். அதுரவிய, என்.எல். ரட்னாயக்க, என்.ஏ.ஏ.என். டில்ருக்ஷி, பி. மகாதேவன், ஆர். கிஹர, ரி.எம்.எஸ். டயஸ், எஸ்.ஆர்.ஜே.எஸ். பண்டார, எச். விஜேசூரிய, நிஹால் குலரத்ன ஆகியவர்களினால் எழுதப்பட்ட “பூமத்திய ரேகை நாடுகளினது எழுச்சி காப்பு கருவிகளுக்கு, Scasa தொழில்நுட்பத்தை சேர்த்துக்கொள்ளல்” எனும் தலைப்பிலான ஆராய்ச்சிக் கட்டுரையானது இலங்கை எந்திரவியலாளர் சங்கத்தின் 2017 ஆம் ஆண்டின் வருடாந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

5.6 சோதனை மற்றும் அளவீடுகள், வன்பொருள் மீட்பு மற்றும் உசாவுத்துணை சேவைகள்

வலு மின்னணுவியல் அளவீட்டு ஆய்வுகூடங்களின் சோதனை மற்றும் அளவீட்டு சேவைகள் - மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவு

வருடகாலப்பகுதியில் பிரிவானது மின்கல சோதனை, எழுச்சி காப்பு கருவிகள் (SPDகள்), எச்ச வலு சுற்று தடுப்பிகள் (RCCBகள்), மிகச்சிறிய சுற்று தடுப்பிகள் (MCBகள்), பிளக்குகள், சொக்கட்டுகள், ஆளிகள் மற்றும் வலை மின்மாற்றிகள் போன்ற பரப்பெல்லைகளில் 232 செயலாற்றுகை சோதனை அறிக்கைகளை வழங்கியுள்ளது. மேலும், வாடிக்கையாளரது இடங்களில் முன்னெடுப்பதற்காக ஏற்றுக்கொண்ட வலு தர அளவீட்டு செயற்பாடுகளுடன் மேலதிகமாக, பாதுகாப்பு சோதனை மற்றும் மின்னியல் மற்றும் மின்னணுவியல் உற்பத்திகளின் வலு தர அளவீடுகள் பற்றிய செயற்பாடுகளையும் பிரிவு முன்னெடுத்தது.

நிறுவனத்தின் பிரதான வாடிக்கையாளர்கள் எனும்போது அதற்குள், ஒரியல் கூட்டுத்தாபனம், டக்ளஸ் மற்றும் புத்திரர்கள், கெவில்டன் மின்னியல் உற்பத்திகள், வரை. டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவகம், வரை. எபிக் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் (தனியார்) நிறுவகம், வரை டயர் கம்பனி, மைக்ரோ பவர் என்ஜினியரிங், இலங்கை கட்டளைகள் நிறுவகம், இலங்கை தொலை தொடர்பாடல், ஹேலீஸ் வாடிக்கையாளர்கள், பொலிகொரம் மின்னணுவியல் கைத்தொழிற்துறை மற்றும் எசோசியேட்டட் மின்கல உற்பத்தியாளர்கள் போன்ற இதர பல உள்ளடங்கும்.

மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட தொல்லை வீழ்த்தல்கள் / திருத்தற் சேவைகள் மற்றும் உசாவுத்துணைகள்

வருட காலப்பகுதியில் உசாவுத்துணை சேவைகள் மற்றும் வன்பொருள் மீட்பு பணிகள் என மொத்தமாக 21 பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட வன்பொருள் மீட்பு பணிகள் எனும்போது அதற்குள், இரத்மலானையில் உள்ள தொழில்நுட்பவியல் கல்லூரிக்காக முன்னெடுக்கப்பட்ட அலைவு நோக்கி திருத்தப்பட்டமை, மின்பிறப்பாக்கிகள் 03 திருத்தப்பட்டமை, ருஹுணு பல்கலைக்கழகத்திற்காக 02 அலைவு நோக்கிகள் திருத்தப்பட்டமை மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்திற்காக ஒரு வெதுப்பகம் திருத்தப்பட்டமை என்பன உள்ளடங்கும்.

மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவினால் உத்தரவாதம் பேணப்படல் மற்றும் ஒப்பந்த சேவைகள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், பொது பாவனைகள் ஆணைக்குழுவிற்கு விநியோகிக்கப்பட்ட 05 RMS மின்வலியளவு பதிலிகளாவன, அவை சிறந்த முறையில் செயற்படுவதற்காக பராமரிக்கப்பட்டது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், பொது பாவனைகள் ஆணைக்குழுவிற்கு விநியோகிக்கப்பட்ட 01 சேய்மை மின்வலியளவு தரவு உட்பதிகை சிறப்பாக செயற்படுவதற்காக பராமரிக்கப்பட்டது.

தொடர்பாடல் பிரிவினால் வழங்கப்பட்ட சோதனை, அளவீடு மற்றும் வன்பொருள் மீட்பு மற்றும் உசாவுத்துணை சேவைகள்

இதன் கீழ் கைத்தொழிற்துறைக்கு உசாவுத்துணை சேவைகள் மற்றும் வானொலி அதிர்வெண் பிரயோகங்களில் முறைப்பாடுகளுக்கு அமைவுற, குறித்துரைப்புகளுக்கு ஏற்றவகையில் பொது அச்சுடைய வடகங்கள் சோதிக்கப்பட்டு அளவீட்டு சேவைகள் வழங்கப்பட்டது.

உசாவுத்துணை

பொலிஸ் திணைக்களத்திற்கு (தொடர்பாடல் பிரிவு) ஆறு உசாவுத்துணை பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அவையாவன கையடக்க இருமைக் கருவி பெறுகை, கைபேசி, குறித்துரைப்புக்கள் பரிசோதனைக்கான ஆன்டென, மாதிரிகளின் செயல்முறைசார் அளவீடு மற்றும் பரிந்துரைப்புக்களின் கீழ் அறிக்கை தயாரிப்பு என்பனவாகும்.

வானொலி அதிர்வெண் பிரயோகம் தொடர்பில் உசாவுத்துணை பணிகள் கீழ்வரும் நிறுவனங்கள் நிமித்தம் முன்னெடுக்கப்பட்டது.

- வரை MBC நெட்வோர்க் (தனி) நிறுவகம்
- இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (மாலபே பல்கலைக்கழகம்)

பொது அச்சுடைய வடகங்களினை சோதித்தல்

கீழ் குறிப்பிட்ட கம்பனிகளுக்காக வடகங்களின் சோதனை பணிகள் மூன்று முன்னெடுக்கப்பட்டது.

- வரை. ஒரியம் கூட்டுத்தாபன (தனி) நிறுவகம்
- வரை. கேபிள் சொலுசன் (தனி) நிறுவகம்

சோதனை மற்றும் அளவீடு

குறித்துரைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவுற, கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவகங்களுக்காக வானொலி

அதிர்வெண் அளவீட்டெண் தொடர்புடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

- வரை. சொலுஸ் (தனியார்) நிறுவகம்
- வரை. பிரய்ம் என்ஜினியரிங் (தனியார்) நிறுவகம்
- டிகேட் இன்டர்நெஷனல்
- ஏக் இன்டர்நெஷனல்
- வரை. கேபிள் சொலுசன் (தனியார்) நிறுவகம்

கைத்தொழில் சேவைகள் பிரிவினால் வழங்கப்பட்ட கருவிகள் தரங்கணிப்பு சேவைகள் / செயலாற்றுகை சோதனைகள்

வருட காலப்பகுதியில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் சோதிப்பு கருவிகள் மீது கருவிகள் தரங்கணிப்பு சேவைகளாவன முன்னெடுக்கப்பட்டதுடன் கைத்தொழில் தேவைகளுக்கு அமைவுற வேறுபட்ட வகையினைச் சார்ந்த சோதனை கருவிகளின் நிமித்தம் மீது 125 தரங்கணிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டன. தரங்கணிப்பு செய்யப்பட்ட கருவிகள் எனும்போது அதற்குள், டிஜிட்டல் / ஒத்திசை பல்மானிகள், அலைவு நோக்கிகள், AC/DC பற்றுமானிகள், உயர் மின்வலியளவு சோதிப்பிகள், ஹிப்பொட் சோதிப்பிகள், செயன்முறை மானிகள், வலு மற்றும் ஹாமொனிக் பகுப்பாய்வு, வாட்ஸ் மானிகள், மின்வலியளவு மானிகள், வலு தர பகுப்பாய்வு, தூக்கிச் செல்லத்தக்க பிரயோக சோதிப்பிகள், காப்பிடும் சோதிப்பிகள், புவி சோதிப்பிகள், RCC's சோதிப்பிகளும் கண்ணி சோதிப்பிகளும் என்பதுடன் பொது பிரதான வாடிக்கையாளர்கள், SGS லங்கா, LTL டிரான்ஸ்போமர்ஸ், கொஹொகு லங்கா, இலங்கை கடற்படை, வெனோரா இன்டர்நெஷனல் மற்றும் டேவிட் பீரிஸ் ஆகியோர் ஆவார்கள்.

கைத்தொழிற் சேவைகள் பிரிவின் LMS ஆய்வுகூடத்தினால் வழங்கப்படும் ஒளி அளவீட்டு சேவைகள்

CFL மின்குமிழ்கள் மற்றும் LED மின் விளக்குகளை பரிசோதிப்பதற்கு ஒளி அளவீட்டு சேவைகளாவன வருடம்தோறும் முன்னெடுக்கப்பட்டதுடன், இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் கூட்டிணைவுடன் 131 அறிக்கைகள் வெளியிடப்பட்டன. எமது பிரதான வாடிக்கையாளர்கள், ஒரியல் கூட்டுத்தாபனம் மற்றும் பிலிப்ஸ் லைட்டிங் லங்கா ஆகியோர் ஆவார்.

தகவல் தொழில்நுட்ப பிரிவினால் வழங்கப்படும் ஒப்பந்த சேவைகள்

தகவல் தொழில்நுட்ப பிரிவானது அரச மற்றும் கைத்தொழிற்துறையைச் சார்ந்த அமைப்பாண்மைகளின் வேறுபட்ட கோரிக்கைகளுக்கு அமைவுற தகவல் தொழில்நுட்ப பிரச்சனைகளுக்கான தீர்வுகளை விருத்தி செய்து வழங்குகிறது.

கீழ் குறிப்பிடப்பட்ட தரவுத் தளங்கள் மற்றும் ஏனைய பேணல் முறைமைகள் நிமித்தம் ஒப்பந்த பேணல் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

- கணக்கியல் முறைமை – மொறட்டுவ பல்கலைக்கழகம்
- கணக்கியல் முறைமை – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கணக்கியல் முறைமை – அபிவிருத்தி லொத்தர் சபை
- கணக்கியல் முறைமை – பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்

6.0 பயிற்ச், கல்வி மற்றும் தகவல்களை பரப்புதல் சேவைகள்கருத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் நிறுவகமானது, கைத்தொழிற்துறையினைச் சார்ந்த எந்திரிகள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்சார்பியலாளர்களுக்கு பயிற்சிகளினை வழங்கும் முகமாக, தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பல வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை, மின்னணுவியல், கணணி வன்பொருள், வாணியலாராய்ச்சி போன்ற இதர பல துறைகளில் அடிப்படை, இடைநிலை மட்ட சார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகிறது.

6.1 தொழில்சார்பியலாளருக்காக தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

செய்நிரற்படுத்தத்தக்க தருக்க கட்டுப்படுத்தி

5 நாட்களைக் கொண்ட தொடர் தொழில்சார் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாவன S7-200 PLC என்பது தொடர்பில் இடம்பெற்றது. தொழில்நுட்பவியல் முகாமையாளர்கள், எந்திரிகள், தொழில்நுட்பவியல் அலுவலர்கள் மற்றும் பட்டம் பயிலும் மாணவர்கள் போன்றோருக்கு இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித்திட்டமானது 81 பேர்களைக் கொண்ட இரு குழுக்களாக நடைபெற்றது. இதன் பங்குபெறுனர்கள், இலங்கை மின்சார சபை, விமான போக்குவரத்து மற்றும் விமான சேவைகள், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், சில்வர் மில் நெச்சுரல் பேவரேஜ், வரை. எலஸ்ரோ மிரிக் என்ஜினியர்ஸ் நிறுவகம் போன்ற இதர பலவற்றை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

உட்பதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமை

நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட ஒரு தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பிறபிக்கப்பட்ட வருமானம் ரூபாய் 625,000/- ஆகும் என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 25 பேர்கள் பங்குபற்றினர். நடாத்தப்பட்ட தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் இதுவே பிரதானமானதாகும். நுண் சில்லுகளை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்படுத்திகளை பயன்படுத்தி நுண் கட்டுப்படுத்தியினை அடிப்படையாகக் கொண்ட முறைமை விருத்திகளை முன்னெடுப்பதற்கு தேவைப்படும் பயிற்சியானது பங்குபெறுனர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியின் முடிவில் பங்குபெறுனர்கள் தமது சொந்த கைத்தொழிற்துறைக்கான கருத்திட்டங்களை தாமே கையாளக்கூடிய செயற்றிறன் உடையவர்களாக்குதலே இந்தப் பயிற்சியின் நோக்காகும்.

மின்னணுவியல், தொடர்பாடல் மற்றும் வானொலி அதிர்வெண் பற்றிய பயிற்சிப் பட்டறை

விசேட படையணிப்பிரிவின் தொடர்பாடல் பிரிவினைச் சார்ந்த 10 அலுவலர்களுக்கு இத் தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாளாந்த செயற்பாடுகளின்போது தமது முறைமைகளை எவ்வாறு பராமரிப்பது என்பது தொடர்பில் பயிற்சியும் மற்றும் செயல்முறை அறிவும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கு, பங்குபெறுனர்களை செயல்முறை சார் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களுக்கு அவர்களின் முறைமைகளை பராமரிப்பது தொடர்பில் செய்கை முறை சார் அறிவினை வழங்குதலாகும். இது மிக அத்தியாவசியமாக சகலரும் தெரிந்துகொள்ளவேண்டியதொரு CSR செயற்பாடு என்பதோடு இதன் மூலம் உழைக்கப்பட்ட தொகை ரூபாய் 100,000/- ஆகும்.

புவி விஞ்ஞான முறைமை

முன்னெடுக்கப்பட்ட புவி விஞ்ஞான முறைமை பற்றிய ஒரு தொடர் தொழில்சார் அபிவிருத்தி கற்கைநெறியில் பங்குபற்றிய பங்குபெறுனர்களின் எண்ணிக்கை 22 ஆகும்.

6.2 அடிப்படை மற்றும் இடைநிலை மட்டத்து தொழில்நுட்பவியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

செய்கைமுறைசார் மின்னணுவியல் கற்கைநெறி

மின்னணுவியல் எனும் துறையினை அதனது அடிப்படை மட்டத்திலிருந்து கற்க விரும்புவோர்களை இலக்காகக் கொண்டு சமுதாயத்தின் சகல மட்டத்தினரும் பங்குபெறும் வகையில் 24 நாட்களைக் கொண்ட (வார இறுதி நாட்கள்) இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. பங்குபற்றியோரின் எண்ணிக்கை 80 என்பதுடன் இதன்மூலம் உழைக்கப்பட்ட வருவாய் ரூபாய் 825,000/- ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது, ஒத்த மின்னணுவியல் டிஜிட்டல் மின்னணுவியல், அடிப்படை கருவிகள் மற்றும் நுண் கட்டுப்படுத்திகள் போன்ற பரப்பெல்லைகள் தொடர்பில் அறிவினை வழங்கியது.

செயல்முறைசார் வானியலாராய்ச்சி அறிமுகவுரை பற்றிய பயிற்சிப்பட்டறை

வானியலாராய்ச்சி பயிற்சிப்பட்டறை மற்றும் இரவு வான் அவதானிப்புக்கள் என்பன 45 செ.மீ. தொலைநோக்குக்காட்டியினை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டன. இந்த பயிற்சிப்பட்டறையில் 40 பேர் பங்குபற்றினர்.

6.3 விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பிரபல்யப்படுத்தல் மற்றும் தகவல் பரப்புதல்

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நூலகம்

நாட்டிலுள்ள உயர்தரமான தொழில்நுட்பவியல் நூலகங்களில் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் நூலகமும் ஒன்றாகும் என்பதுடன், தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் ஒளிப்படவியல், மனித எந்திரவியல் மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் போன்ற மிக முக்கிய தொழில்நுட்ப துறைகளில் கணிசமானளவு எண்ணிக்கையான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய கல்விச் சாதனங்களை இந்த நூலகம் கொண்டுள்ளது.

இந்த நூலகத்தின் பிரதான நோக்கானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள தொழில்சார்பியலாளர், தனிப்பட்டோர், பட்டதாரிகள், பட்டப்பின் பட்டதாரிகள் மற்றும் மாணவர்கள் போன்ற இதர பலருக்கு அவர்களுக்கு தேவைப்படக்கூடிய தகவல்களை வழங்குதலாகும்.

நூலக சேகரிப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ கிளார்க் நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

2012-2016 காலப்பகுதியினுள் தேயிலை வர்ணங்களை தரப்படுத்தும் பொறி உற்பத்தி ஆராய்ச்சி செயற்றிட்டம் பொருட்டு நிறுவகத்தினால் உறப்பட்ட ரூபா 4,209,066 தொகையில் ஆராய்ச்சி செலவான ரூபா 363,646 தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பந்தி 47 பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தற் ஆணைக்குழுவிற்கு சேவை வழங்கியமை தொடர்பில் மீளாய்வாண்டு பொருட்டு நிறுவகத்திற்கு கிடைக்க

(ஆ) செயற்றிட்டமொன்று தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,545,744 பெற வேண்டியதொன்றாக கணக்குகளில் பதிவதற்குப் பதிலாக நடைபெறும் நிருமாணங்களாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தற் ஆணைக்குழுவிற்கு சேவை வழங்கும் முகமாக நிறுவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் 2014 நவம்பர் முதல் 2015 யூலை வரையில் கிடைக்க வேண்டிய ரூபா 729,296 ஆன வாடகை வருமானம் 2018 ஆகஸ்ட் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 ஆண்டுகள் விஞ்சியுள்ள வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 1,926,039 ஆக இருந்ததுடன் இத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை,

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிசார் விளைவு ரூபா 10,164,058 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,287,030 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 25,451,088 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்றிட்டங்களுக்கான செலவினங்கள் ரூபா 2,818,000 இனாலும் ஊழியர் ஊதியம் ரூபா 7,264,000 இனாலும் அதிகரித்த போதிலும், மீளாய்வாண்டின் மீண்டுவரும் மானிய பெறுவனவுகள் ரூபா 36,415,000 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக விளங்கியது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வுசெய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 5,957,641 ஆகவிருந்த மிகை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 9,511,887 வரை அதிகரித்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 15,287,030 குறைவினை அடைந்திருப்பினும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 10,164,058 மிகை வரையில் மீண்டும் வளர்ச்சியடைந்திருந்தது. நிதிசார் விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நிலையான சொத்துக்கள் பொருட்டான தேய்மானம் ஆகியனவற்றை மீண்டும் சீராக்கும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 71,098,467 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 123,835,922 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. செயலாற்றல்

4.1.1 செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்

நிறுவகத்தின் செயலாற்றல் தொடர்பிலான சோதனையின்போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தேயிலை வர்ணங்களை தரப்படுத்துவதற்கான செலவு குறைந்த பொறியொன்றை தயாரிக்கும் ஆராய்ச்சி செயற்றிட்டம் பொருட்டு 2016 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 4,209,066 செலவினங்கள் உறப்பட்டிருந்தன. இருப்பினும், அதுவரையில் மேற்கொண்ட முறையியலில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2016 ஆம் ஆண்டில் இப்பொறியை தயாரிக்கும் பொருட்டு தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 8,000,000 தொகையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருந்தது. 4 படிநிலைகளைக் கொண்ட இச்செயற்றிட்டத்தின் ஒப்பந்தம் பிரகாரம் 2017 ஆகஸ்ட் மாதமளவில் பொறியின் வேலைகளை முடிவுறுத்தி தொழில்நுட்ப ஒப்படைகளை பெற்றிருக்க வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் இரண்டாம் படிநிலையின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தின் 3 பிரிவுகளினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 6 கற்கைநெறிகள் பொருட்டு வளவாளர்கள் இல்லாமையும், கற்கைநெறிகள் பொருட்டு கேள்வி இல்லாமையும், கற்கைநெறி உள்ளடக்கங்களை மாற்றியமைக்காமையும் போன்ற காரணங்களினால் குறித்த கற்கைநெறிகள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஊடகப் பிரிவொன்று நிறுவகத்தில் காணப்பட்ட போதிலும், நவீன தொழினுட்பம் தொடர்பிலான இத்தகைய

கற்கைநெறிகளை பிரபல்யப்படுத்துவதற்காக போதியளவு வேலைத்திட்டத்தை செயற்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவகத்தின் நூலகத்தை தன்னியக்கவாக்கும் (RFID Library Automation System) செயற்றிட்டமொன்று தகவல் தொழில்நுட்ப பிரிவுடன் ஒன்றிணைந்து தொடர்பாடல் பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 93,486 செலவு உறப்பட்டிருந்தது. இருப்பினும் அது, 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகம் பொருட்டு ஒன்றிணைந்த முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை உருவாக்கும் பணி சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் 2018 ஆகஸ்ட் வரையிலும் குறித்த பணி முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பொருட் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 75,000 செலவு உறப்பட்டிருந்தது.

(உ) இலங்கைக்கு நவீன தொழினுட்பத்தை அறிமுகப்படுத்தலைத் துரிதப்படுத்துவதே நிறுவகத்தின் பிரதான குறிக்கோள் ஆனபோதிலும், நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள பதவியினரின் இயலளவினை விருத்திசெய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,700,000 நிதியேற்பாடு பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், மீளாய்வாண்டு பொருட்டு மனித வளத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மூன்று நவீன தொழினுட்ப செயற்றிட்டங்களை மீளாய்வாண்டில் வணிகமயப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் தொழினுட்பம் எதுவும் வணிகமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புவியை கண்காணிக்கும் தரவுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தரவுகளை பரிமாறிக்கொள்ளுதல் பொருட்டான தேசிய நிலையமொன்றை தாபிக்கும் செயற்றிட்டம் பொருட்டு நிறுவகம் சீன முகவர்நிறுவனமொன்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டிருந்ததுடன் அதற்காக எவ்வித திட்டமும்

இருக்கவில்லை. அத்துடன், செயற்றிட்டத்திற்கான காணி தொடர்பான சாத்தியவள ஆய்வு இன்றி நிறுவகத்திற்கு சட்டரீதியான உரிமையில்லாத காணி தெரிவுசெய்யப்பட்டிருப்பினும் சீன முகவர்நிறுவனம் பின்னர் மேற்கொண்ட கண்காணிப்பு விஜயங்களின்போது குறித்த காணி செயற்றிட்டம் பொருட்டு உகந்ததல்ல என்பதனால் வேறொரு காணியை தேடிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் பொருத்தமான காணியொன்றை முறையாக உரிமைமாற்றிப் பெற்று செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டிலுள்ள தேசிய வானியியல் கண்காணிப்பு செயற்றிட்டம் பொருட்டு தேவையான உபகரணமொன்றான தொலைநோக்கி இல்லாத காரணத்தினால் குறித்த செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018 பெப்ருவரி மாதத்தில் ரூபா 3,284,150 பெறுமதியான தொலைநோக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருப்பினும், 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் குறித்த உபகரணமும் தர பரிசோதனை செய்யப்பட்டு இருக்காமையினால் இந்த செயற்றிட்டம் மென்மேலும் தாமதமாகியது.

(இ) விவசாய வரட்சி கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறைமையை அமைக்கும் செயற்றிட்டமொன்று நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பயிர்களின் உலர்ந்த தன்மையை முறைமை ஊடாக இனங்காணுதல் மற்றும் சாதாரண கண்களால் இனங்காணுதல் ஒன்றானதா என பரிசோதித்தறியும் படிநிலையில் இச்செயற்றிட்டம் காணப்படுவதுடன் சாதாரண கண்களால் கண்காணித்து தரவுகளை பெற்றுக்கொள்ளும் பணி விவசாய துறையின் 7 நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பினும் குறித்த நிறுவனங்கள் இப்பணிக்குத் தேவையான தரவுகளை வழங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எனினும், குறித்த விவசாய நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டு ரூபா 875,725 செலவு நிறுவகத்தினால் உறப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகமானது அதி தொழினுட்ப பாதுகாப்பு கெமரா முறைமையினை பொருத்தும் சேவைகளை வழங்குவதுடன் 2012 - 2017 காலப்பகுதியினுள் அதற்காக ஒரு கட்டளை மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பொருட்டு ரூபா 8 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் வேறு சேவைபெறுநர்கள் பொருட்டு அச்சேவைகளை வழங்கும் வாய்ப்புக்களை தொடர்ந்தும் அதிகரித்துக்

கொள்வதற்குத் தேவையான நடைமுறைகளை எடுப்பது தொடர்பில் நிறுவகம் அக்கறை காட்டியிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது காணப்படும் ரூபா 4,091,099 கொள்விலை கொண்ட இருப்புக்களில் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத இருப்புக்களையும் மெதுவாக அசைவுறும் இருப்புக்களையும் இனங்கண்டு கையுதிர்ப்புச் செய்வதற்கு அல்லது வேறு பொருத்தமான வழிமுறை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

தொல்பொருளியல் ஆய்வு மற்றும் அகழ்தல் பொருட்டும் வேறு அரச நிறுவனங்களின் தேவைப்பாடுகள் பொருட்டும் புகைப்படங்கள் எடுப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 10,564,677 செலவுசெய்து விமானிகளற்ற விமானமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதிலும் 2018 ஆகஸ்ட் மாதமளவிலேனும் அதிலிருந்து எவ்வித பயனையும் பெற்றியிருக்கவில்லை.

4.5 பதவியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 177 ஆகவும் உள்ளபடியான பதவியணி 102 ஆகவும் விளங்கியமையினால் 75 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியன்று 27 பதவிகளில் 85 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், 8 பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மட்டும் செய்தித்தாள் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 4 பதவிகளில் 18 வெற்றிடங்கள் மட்டும் இவ்வாண்டினுள் நிரப்பப்பட்டிருந்தது.

(இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் நேரடியாக சம்பந்தப்படுகிற பதவிகளில் சில வருட காலமாக 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுதலும், குறித்த பணிகளில் பணியாளர்களை தக்கவைத்துக் கொள்வதில் சிரமம் என்பதனால் நிறுவனம் எதிர்பார்த்த குறிக்கோள்களை எய்துவதில் பாதகமாக தாக்கம் செலுத்தக்கூடும் என்பதனால் அதுதொடர்பில் காணப்படும் பிரச்சினைகளை மீளாய்வுசெய்து

அப்பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவு பிரகாரம், நிரந்தர நியமனம் வழங்கும் வரையில் தற்காலிக பரிகாரமொன்றாக மட்டுமே பதிற்கடமை நியமனமொன்று வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பதவி பொருட்டு முழுநேர அலுவலர் ஒருவரின் சேவை அவசியமெனின் நிரந்தர நியமனங்கள் தாமதமின்றி வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் 3 பதவிகள் மற்றும் ஒரு பணிப்பாளர் பதவி பொருட்டு 2013 மற்றும் 2015 ஆண்டுகளிலிருந்து பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆகஸ்ட் வரையிலான 5 ஆண்டு காலத்தினுள் குறித்த வெற்றிடங்கள் பொருட்டு நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்களை எய்துதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு "நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயலாற்ற வேண்டியிருப்பதுடன், மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளாக்கு நிறுவகம் தமது விடயப்பரப்புக்கு கீழான பணிகள் சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களையும், இலக்குகளின்படி அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இலக்குகளில் அடைதலை அளவிடுவதற்கான சரியான தரவுத் தளமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள், பயிற்றப்பட்ட ஊழியர்கள் அல்லது பௌதிக வசதிகள் என்பனவற்றின் தேவைப்பாடுகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகை வழிகாட்டுநெறியின் 8.9.1 (ஆ) பிரகாரம், ரூபா 500,000 க்கு மேற்பட்ட பொருள் அல்லது சேவை ஒப்பந்தங்கள் பொருட்டு முறையான ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியபோதிலும் ரூபா 17,968,823 பெறுமதியான 11 பெறுகைகள் பொருட்டு உடன்படிக்கைகள் செய்திருக்கவில்லை.

(ஆ) கேட்போர்கூடம் பொருட்டு செவிப்புல, கட்புல மற்றும் வெளிச்சமூட்டும் முறைமையை (Audio Visual & Lightning System) நிறுவுதல்

கேட்போர்கூடம் பொருட்டு செவிப்புல, கட்புல முறைமையொன்றை வழங்குதல், நிறுவுதல், சோதித்து இயக்கிக்காட்டும் ஒப்பந்தமொன்று ரூபா 6,222,011 விலைமதிப்புப் பெறுமானம்(வரியுடன்) ஒப்பந்ததாரர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(i) இத்தகைய முறைமையொன்றின் தேவைப்பாடு 2016 யூலை 22 ஆம் திகதி கட்டுப்பாட்டுப் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் வழங்குவதற்காக 2017 நவம்பர் வரையில் 01 ஆண்டு காலத்துக்கு மேல் கடந்திருந்தது.

(ii) ரூபா 1,127,872 முற்பணம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் பொருட்களின் ஒரு பகுதி விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், கட்டுப்பாட்டுப் பிரிவின் தரை தேவைக்கேற்றவாறு அமைக்கப்படாமை, தேவையான தளபாடங்கள் வழங்கப்படாமை, கேட்போர்கூடத்தில் நீர்க்கசிவு ஏற்படுதல் போன்ற காரணங்களினால் 2018 ஆகஸ்ட் வரையிலும் ஏனைய பொருட்களை பொருத்தி ஒப்பந்த வேலைகளை முடிவுறுத்த முடியாதிருந்தது. இருப்பினும், இதற்கு பெறப்பட்டிருந்த செயலாற்றுகை பிணையும் 2018 ஆகஸ்ட் 22 ஆம் திகதி முடிவடைந்திருந்தது.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்		அவதானிப்புக்கள்
(அ) பெறுகை செயன்முறை	(i)	விலைமனுக் கோரல் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டது என குறிப்பிடப்பட்டிருப்பினும் அதற்கான சான்றுகள் கோப்புக்களில் இல்லாமை.
	(ii)	பெறுகை முன்னேற்ற அறிக்கை பெறுகைத் திட்டத்துடன் ஒப்பிடுவதற்கு ஏற்றவாறு தயாரிக்கப்படாமை.
	(iii)	செயலாற்றுகை பிணை பெறும்போது தாமதம் ஏற்பட்டிருந்தமை.
	(iv)	பொருள் அல்லது சேவை கொள்வனவுகளின்போது கொள்வனவுக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் பொருள் அல்லது சேவையை வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணம் அறவிடுவதற்குப் பதிலாக விநியோகக் காலத்தை நீடித்துக்கொடுத்தல்.
	(v)	பொருள் பெறுவனவுப்படிவம் விநியோகிக்கப்படும்போது தாமதம் ஏற்படுதலும் விநியோகிக்கப்படாத பொருள்கள் காணப்படுதலும்.
(ஆ) முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	(i)	முன்னேற்ற அறிக்கைகளின் பௌதிக முன்னேற்றம் சதவீதத்தில் காட்டப்படாமை.

(ii) செயல் நடவடிக்கைத்திட்டத்தில் அடங்கிய ஒவ்வொரு செயற்பாட்டின் நிதிசார் முன்னேற்றம் முன்னேற்ற அறிக்கைகளில் வெவ்வேறாக காட்டப்படாமை.

எச்.எம்.காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமையதிபதி

1971 ஆம் ஆண்டின் 38 அம் இலக்க நிதி சட்டத்தின் 14(2) (இ) பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைவுற நவின தொழினுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக்கின் 2017 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய நிதி கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு பதில்கள்

2.2 நிதியியல் கூற்றுக்கள் பற்றிய கருத்துரைகள்

2.2.1 இலங்கை அரசதுறை கணக்கியல் கட்டளைச் சட்டங்களுடன் ஒத்து இணங்காமை

கணக்கீடுகள் செய்தல் தொடர்பில் சபை பணிப்பாளர்களின் அனுமதி பெறப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சீராக்கங்கள் தொடர்பில் நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவின் பரிந்துரைப்புக்ள் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

அ) நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகத்திற்கும் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கும் இடையிலுள்ள உடன்படிக்கைக்கு அமைவுற கொடுப்பனவுகளாவன 2014 டிசம்பர் மற்றும் 2015 சனவரி மாதங்களில் அறுதியீடு செய்யப்படல் வேண்டும் எனினும் அவர்கள் பாவிக்கும் கட்டிடமானது பரிந்துரைக்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைவுற நிர்மாணம் செய்யப்படவில்லை என்பதினால் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது கொடுப்பவை மேற்கொள்ள முடியாது என மறுத்ததுடன் அதனை எழுத்தில் அறியச் செய்தது. எவ்வாறாயினும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் இந்தத் தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகமும் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் இரு தரப்பினரதும் இணக்கத்துடன் 2015 ஆம் ஆண்டில் இரண்டு வருட காலப்பகுதியை உள்ளடக்கிய ஒரு உடன் படிக்கையில் தம்மை நுழைத்துக் கொண்டனர். இந்த உடன் படிக்கையின் நிபந்தனைகளுக்கு அவைற திருத்தப்பட்ட குத்தகை பணத்தொகையானது 2015 ஆகஸ்ட் மாதத்திலிருந்து எமது நிறுவகத்திற்கு கிடைத்தல் வேண்டும் 2015 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து யூலை 31 ஆம் திகதிவரையில் அலுவலகத்தில் பேணல் பணிகள் முன்னெடுக்கப்பட்ட காரணத்தினால் உடன் படிக்கையில் இக் காலப்பகுதி உள்ளடக்கப்படவில்லை.

ஆ) கணக்காய்வு அவதானத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, ரூபாய் 3,545,744.00 மில்லியன் தொகையானது நகர அபிவிருத்தி சபைக்கு ஒரு வேலியினை ஏற்கனவே கிடைக்கப் பெற்ற நிலப்பரப்பிற்கு சுற்றிவர கட்டுதல் நிமித்தம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த வேலியானது இதுவரையில் கட்டப்படவில்லை பொருத்தமான நிலப்பரப்பு ஒன்று கிடைக்கப்பெற்ற பின்னர் இந்த வேலியினை கட்டுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும் இதன் காரணமாக இத் தொகையானது கிடைக்கப்பெறவேண்டிய ஒரு தொகையாக காட்டப்படாது நடைமுறை வேலை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது

2.3 கொடுக்கப்படவேண்டிய மற்றும் பெற்றப்படவேண்டிய மிகுதிகள்

கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவை அவதானிக்கப்பட்டது

(இ) நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகத்திற்கும் மற்றும் இலங்கை தொலை தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கும் இடையிலுள்ள உடன்படிக்கைக்கு அமைவுற கொடுப்பனவுகளாவன 2014 டிசம்பர் மற்றும் 2015 சனவரி மாதங்களில் அறுதியீடு செய்யப்படல் வேண்டும் எனினும் அவர்கள் பாவிக்கும் கட்டிடமானது பரிந்துரைக்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைவுற நிர்மாணம் செய்யப்படவில்லை என்பதினால் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்கு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவானது கொடுப்பவை மேற்கொள்ள முடியாது என மறுத்ததுடன் அதனை எழுத்தில் அறியச் செய்தது. எவ்வாறாயினும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் இந்தத் தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்

நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகமும் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் இரு தரப்பினரதும் இணக்கத்துடன் 2015 ஆம் ஆண்டில் இரண்டு வருட காலப்பகுதியை உள்ளடக்கிய ஒரு உடன் படிக்கையில் தம்மை நுழைத்துக் கொண்டனர் இந்த உடன் படிக்கையின் நிபந்தனைகளுக்கு அவைறு திருத்தப்பட்ட குத்தகை பணத்தைகையானது 2015 ஆகஸ்ட் மாதத்திலிருந்து எமது நிறுவகத்திற்கு கிடைத்தல் வேண்டும் 2015 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து யூலை 31 ஆம் திகதிவரையில் அலுவலகத்தில் பேணல் பணிகள் முன்னெடுக்கப்பட்ட காரணத்தினால் உடன் படிக்கையில் இக் காலப்பகுதி உள்ளடக்கப்படவில்லை

2015 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2015 யூலை 31 ஆம் திகதி வரையில் பராமரிப்பு பணிகளாவன புதிய உடன்படிக்கைக்கு (2015) ஒருங்கிணைந்த வகையில் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதனுடன் சம்மந்தப்பட்ட விலை விபர பட்டியலிற்கான கொடுப்பனவானது இந்த புதிய உடன்படிக்கைக்குள் உள்ளடக்கப்படவில்லை. இந்த விலைவிபரப்பட்டியலை எதிர்காலத்தில் இரத்து செய்வதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது

(ஆ)

காப்புறுதி கூட்டுத்தாபன கடன்பட்டோர்	ரூபாய்	9,700.00
பெறப்பட வேண்டிய கணக்குகள் - TG	ரூபாய்	182,234.00
பெறப்பட வேண்டிய கணக்குகள் - PC	ரூபாய்	1,530,444.27
கடன் பட்டோர் - P.T. பர்னாந்து	ரூபாய்	4,000.00
கடன் பட்டோர் - ஜயத்து – பர்னாந்து	ரூபாய்	106,894.72
R.S – கடன் பட்டோர்	ரூபாய்	14434.91
அமைச்சு கடன் பட்டோர்	ரூபாய்	33,381.50
கடன் பட்டோர் - V.R.P பெரேரா	ரூபாய்	39,699.66
தேர்தல் திணைக்கள கடன் பட்டோர்	ரூபாய்	8,159.60
	ரூபாய்	1,929,038.66

கணக்காய்வு அவதானிப்பில் காட்டப்பட்டுள்ள தொகைக்குள் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட தொகைகளின் கூட்டுத்தொகையும் உள்ளடங்கும் மேலும் இத் தொகைகளை அறுதியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

3. நிதியியல் மீளாய்வு

3.1 நிதியியல் பெறுபேறு

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) இக் கருத்திட்டத்தினது Xilinx FBGB உயர் தொழினுட்ப மின்ணணுவியல் உப முறைமை தொடர்பில் E-Net நிறுவகத்துடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. உடன் படிக்கைக்கு அமைவுற எந்திரவியல் விருத்திகளாவன நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சீ கீளாக் நிறுவகத்தினால் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதோடு ஒப்படைக்கப்பட வேண்டியவைகள் E-Net நிறுவகத்தினால் நவீன தொழினுட்பவியல் ஆதர் சீ கிளாக் நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் என குறிப்பீடு செய்யப்பட்டது. இதன் படி உடன்படிக்கையின் கட்டம் 2 இன் கீழ் அடங்கும் இயந்திரவியல் உபகரண உற்பத்திக்கு அதிக காலம் செலவிடப்பட வேண்டியதாகவுள்ளது அத்தகைய மிக நுண்ணய இயந்திர உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிப் பட்டறைகள் மிகவும் அறிதாகும் அது போன்று உற்பத்திக்கு தேவையான காலப்பகுதியும் மிகவும் அதிகமாகும் ஆதலினால் கட்டம் 2 பூர்த்தி செய்வதற்கு அதிக காலம் தேவைப்பட்டது (2018 ஆகஸ்ட் மாதம் வரையில்) இதன் காரணமாக இரு தரப்பினரதும் உடன் பாட்டிற்கு அவைறு கட்டம் 02 மற்றும் கட்டம் 03 ஆகியவற்றை ஒரே நேரத்தில் அமுல்படுத்துகை செய்வதற்கு உடன் படிக்கை கைச்சாத்திடப்படும் 2019 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு தேயிலை

ஆலையில் இவை செய்கை முறை விளக்கமளிப்பாக காட்டப்படுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) காலாத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் கற்கை நெறியின் பாடத்திட்டமானது ஒவ்வொரு வருடமும் திருத்தி அமைக்கப்படும். கற்கை நெறியினை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் சம்மந்தப்பட்ட பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டன. இந்த கற்கை நெறிகளுக்கான விண்ணப்பதாரரை தேடுவதற்கான பொறுப்பானது அந்த பிரிவிற்கே உரித்தானதாகும் இந்த கற்கை நெறியில் அரச, அரச சாராத துறை அரசு மற்றும் தனியார் துறையினை சார்ந்தவர்கள் பங்கு பற்றினர் 2017 ஆம் ஆண்டில் பயிற்சிகளுக்கு வழங்கப்படும் பாதீட்டு ஒதுக்கீட்டு தொகையானது அனேக நிறுவனங்களுக்கு குறைவாக வழங்கப்பட்டமை அனைவரும் தெரிந்த விடயமாகும் இக் கற்கை நெறிக்கு ஆகக்குறைந்த அளவிலும் கூட விண்ணப்பதாரிகள் கிடைக்கப்பெறாததினாலும் பிரதான கேட்போர் கூடத்தில் முன்னெடுக்கப்பட்ட திருத்த வேலைகளினாலும் இக் கற்கைநெறியின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கானது அடையப் பெறவில்லை.

(இ) இக் கருத்திட்டத்தின் சோதனைக் கட்டமானது 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இதன் போது நூலக பாதுகாப்பு நுழைவுக் கூறில் சில வழுக்கள் இனம் காணப்பட்டது. ஆதலினால் இந்த கூறுக்கான உப முறைமை தொடர்பில் சிற்சில குறித்துரைப்புக்கள் தயாரிக்கப்பட்டதோடு பெறுகை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன பெறுகை நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படும் சிற்சில உருப்படிகளாவன ஏற்கனவே நிர்மாணம் செய்யப்பட்டுள்ள முறைமைகளுடன் இணங்குதல் வேண்டும். இக் கருத்திட்டத்திற்கு தேவைப்படக்கூடியதொரு உப பகுதியின் பெறுகை நடவடிக்கையானது, 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட்டது. உப பகுதி உள்ளடங்கலாக இந்த முழு முறைமையும் தற்போது சோதனை செய்யப்படுகின்ற கட்டத்திலுள்ளது 2018 ஆம் ஆண்டில் இந்த முழு முறைமையும் செய்கை முறை விளக்கமளிப்பு செய்யப்படுதலின் நிமித்தம் முன் வைக்கப்படல் வேண்டும்

(ஈ) நிறுவகத்தினால் பல வருடகாலமாக பாவித்து வந்த ஒரு செயற்பாடுகளை இலகு படுத்துவதற்கு தேவையான பல மென் பொருட்களை நிறுவகத்தின் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் வடிவமைத்தது. இந்த மென் பொருட்களை விருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகளின் சிற் சில வேறுபாடுகள் உள்ளன. ஆகையினால் மென் பொருட்களினையும் ஒருங்கினைக்கும் வகையில் ஒரு ஒற்றை தகவல் முறைமையினை விருத்தி செய்வதற்கு தொடங்கப்பட்டதோடு இதனை 2017 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் பூரணபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போதுள்ள மென் பொருளுக்கு புதிய விடயங்களை சேர்க்க வேண்டியிருத்தல் மற்றும் நிலையான சொத்து பதிவேடு, சேவை உடன்படிக்கை பேணல் முறைமை போன்ற பல புதிய கூறுகளை உள்ளடக்க வேண்டியிருந்தமை போன்ற காரணங்களினால் மென் பொருளை பூரணப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. புதிய கூறுகள் உள்ளடங்கலாக இங்கு தகவல் முறைமையை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

(உ) நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் சம்மந்தப்பட்டுள்ள பதவியணியினரின் செயற்றிறனை பிரிவு வாரியாக கட்டியெழுப்புவதற்கான ஒதுக்கீடுகளாவன, பாரிய கருத்திட்டங்களுக்குரிய மூலதன ஒதுக்கீடுகளில் இருந்து மேற் கொள்ளப்பட்டதோடு இது தொடர்பில் கிட்டத்தட்ட ரூபாய் 16 மில்லியன் 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது

(ஊ) 3 கருத்திட்டங்களிற்குரிய உற்பத்திகளாவன 2017 ஆம் ஆண்டில் வர்த்தக மயப்படுத்துகை செய்தல் நிமிர்த்தம் முன்னளிப்பு செய்யப்பட்டதுடன் இவற்றுள் இரண்டு, மின்சார ஆளிகள், சொக்கட்டுக்கள் பிளக்குகள் போன்ற மின்சார உபகரணங்களின் தரத்தை சோதிப்பதற்கான கருவிகளாகும் என்பதோடு இக் கருவிகள் மின்னியல் உபகரணங்களை உற்பத்தி செய்வோருக்கும் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் போன்ற சோதிப்பு நிறுவகங்களுக்கும் ஏற்புடையதாக இருக்கும். இத்தகைய நிறுவகங்களுக்கு புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த கருவிகள் தொடர்பில் அறியச் செய்யப்பட்ட போதிலும் சாத்தியமான மறுமொழி எதுவும் கிடைக்கப்பெறவில்லை

எவ்வாறாயினும் இந்த தொழில்நுட்பங்களை எதிர்காலத்தில் வர்த்தகமயபடுத்துகை செய்வதற்கான ஆதவினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

"வாகன கண்டுபிடிப்பு மற்றும் எரிபொருள் அவதானிப்பு" எனப்படுகின்ற கருத்திட்டத்தை வர்த்தக மயப்படுத்துகை செய்வதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் இக் கருத்திட்டத்திற்கு ஒப்பானதும் அதே போன்றும் இக் கருத்திட்டத்திலுள்ள தொழில்நுட்பவியல் தீர்வுகளை விட அதிக

தரமான தீர்வுகள் சந்தையில் இருந்ததினாலும் இக் கருத்திட்டத்தை சந்தைப் படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி வெற்றிகரமாக அமையவில்லை

மேலும், 2016 ஆம் ஷஆண்டில் வர்த்தக மயப்படுத்தப்பட்ட இந்த முறைமைகு விநியோகத்தி பின்னான சேவையினை வாடிக்கைகையாளர்களுக்கு வழங்குவதில் செயல்முறைசார் ரீதியான சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினாலும் இந்த முறைமை வர்த்தக மயப்படுத்துகை செய்தலில் சாத்தியத்தன்மை குறைவாகும்

2017 ஆம் ஆண்டில் நவீன் தொழில்நுட்வியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகத்தினால் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களின் சந்தைப்படுத்தல் நிலைப்பாடு

2017 ஆம் ஆண்டின் தொழில்நுட்பவியல் மாற்றீட்டு நிமித்தம் கிடைக்கப்பெற்ற உற்பத்திகள்	**உற்பத்தியின் பாவணை**	**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**
Endurance சோதிப்பி	SLS 734/1996, SLS 948/1991 ஆகியவற்றின் நபந்தனைகளுக்கு அமைவுற மின்னியல் ஆழிகள், சொக்கட்டுக்கள் மற்றும் பிளக்குகளை சோதித்தல்	எமது சோதனை வசதிகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கு அக அடிப்படையில் விருத்தி செய்யப்பட்டதொரு மிக நுணுன்னமானதொரு உற்பத்தியே ஏயவாள.
Tumviling Barrel	SLS 734 மற்றும் SLS 948 இற்கு அமைவுற 5 A, 30A, 15A பிளக்குகளின் இயந்திரவியல் வலுவினை சோதித்தல்	
வாகன கண்டுபிடிப்பு மற்றும் எரிபொருள் கண்காணிப்பு முறைமை	தனிப்பட்டோர்களின் வாகணங்களை பொறுத்தவரையில் வாகனம் தரித்ஷது நிற்கும் இடத்தை தெரியப்படுத்த கூடியது என்பதுடன் வாகன குழாம்கள் சரியான முறையியல் முகாமைத்துவம் செயயப்படுவதற்கு அந்த வாகனங்களின் எரிபொருள் மட்டம் பற்றிய சரியான தரவுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருத்தல்	இந்த உற்பத்தி ஆரம்பத்தில் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளக் நிறுவகத்தின் பாவணைக்காக விருத்தி செய்யப்பட்டது பின்பு 2016 / 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இது ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் தேவையின் நிமித்தம் அறிமுகப்படுத்தப்பட்டது முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் இதே போன்ற உற்பத்திகள் சந்தையில் பல இரக்கின்ற காரணத்தினாலும் மற்றும் இதன் அமுல்படுத்துகை தொடர்பில் வாடிக்கையாளர் தரப்பில் இருக்கின்ற சிக்கல்கள் காரணத்தினாலும் இதன் அறிமுகத்தை மேன்படுத்துதல் கடினமானதாகும்

சம்மந்தப்பட்ட வருடத்தில் (2017) விருத்தி செய்யப்பட்ட சகல தொழில்நுட்பங்களையும் இந்த சிக்கல் பாதிக்கும்.

2017 ஆம் அண்டில் வர்த்தக மயப்படுத்துகை செய்வதற்கு தயாராக இருந்த தொழில்நுட்பங்களின் விபரங்களையும் மற்றும் அது தொடர்பிலான சிக்கல்களையும் மேலே உள்ள அட்டவணை காட்டுகின்றது.

4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

அ) "புவி அவதானிப்பு தரவுகளை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பகிர்வதற்குமான தேசிய மைய நிலையம்" எனும் விடயம் தொடர்பில் மெகா பொலிஸ் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினாலும் மஹேன் வத்தை, பிட்டிப்பான யிலுள்ள ஹோமாகம என்னுமிடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வினை தொடர்ந்து இந்த விடயத்திற்கு பொருத்தமான ஒரு இடம் ஒன்று உயர்ந்த நிலப்பரப்பு ஒன்றில் தெரிவு செய்யப்பட்டது எதிர்காலத்தில் இந்த நிலத்தை சுற்றி (இந்த நிலத்தின் நெட்டாங்கு மற்றும் அகலாங்கினை ஆய்வு செய்த பின்னர்) எதிர்காலத்தில் கட்டப்படவேண்டிய கட்டிடத்தின் ஆகக்கூடிய உயரத்தை குறித்துக்கொண்ட பின்பு அந்த விபரமானது நகர அபிவிருத்தி சபைக்கு அறியச் செய்யப்பட்டது தெரிவு செய்யப்பட்ட நிலத்திற்கு அண்மித்ததாய் ஒரு தொடர்பாடலட் கோபுரம் அமைந்திருப்பதோடு இதன் முக்கியத்துவத்தன்மையினை கருத்திற் கொண்டு நோக்குகயில் இந்தக் கோபுரமானது இன்னுமொர இடத்திற்கு மாற்றீடு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், இந்த கருத்திட்டத்தின் மற்றைய பணயப்பொருளாளரான, சீன நாட்டை சேர்ந்த சென்மதி தரவுகள் பற்றிய தேசிய நிறுவகத்தை (Radi) சார்ந்த எந்திரிகள் குழாம் ஒன்று இந்த இடத்திற்கு விஜயம் செய்ததோடு இதே நிலப்பரப்பிற்குள் இன்னுமொரு நிலத்தை பெற்றுக் கொள்ளவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா என வினவின. இதற்கமைவுற பாதுக்க, கொரகல என்னுமிடத்திலுள்ள டெக்னோ சிட்டி கருத்திட்டத்தில் அமைந்துள்ள ஒரு இடம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டதோடு இது தொடர்பில் தமது இணக்கப்பாட்டினை சீன நாட்டு எந்திரிகள் தெரிவித்தனர். நகர அபிவிருத்தி அதிகார சபையானது, 2018 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி இட்ட தனது கடிதத்தினூடாக இந்த நிலத்தை எமது நிறுவகத்திற்கு மாற்றீடு செய்வதற்கான சம்மதத்தை தெரிவித்திருந்தது. இதற்கமைவுற வேலி கட்டும் பொருட்டு நகர அபிவிருத்தி சபைக்கு செய்யப்பட்ட கொடுப்னவானது புதிய நிலத்தை சுற்றி கட்டப்படவுள்ள வேலியின் நிர்மாண செலவினத்திற்கு அல்லது வேறேதேனும் பணிநிமித்தம் ஏற்படக்கூடிய செலவினத்திற்கு எதிராக பதிலீடு செய்யப்படும் இது ஒரு நிர்மாண பணி என்பதினால் இது கணக்குகளில் நடைமுறை வேலையாக காட்டப்பட்டுள்ளது

ஆ) வானியல் சம்மந்தமான ஆராய்ச்சின் நிமித்தம் வரையறுக்கப்பட்ட றொட்டக்ஸ் தனியார் நிறுவகத்தில் 2017 ஆம் அண்டு டிசம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட 14" தொலைநோக்கு காட்டியானது இலங்கையில் பாவிப்பதற்கு ஏற்ற வகையில் மாற்றங்களை வெற்றிகரமாக செய்து (அகலாங்கு) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த தொலைநோக்கு காட்டியின் சகல பாகங்கயிலிலும் தர பரிசோதனை செய்யப்பட்டதோடு எதிர் வரும் மாதத்தில் வரல் வலய பிரதேசம் உன்றை சார்ந்த தொரு இடத்தில் நச்சத்திரங்கள் மற்றும் விண்மீன்கள் பற்றிய ஆய்வில் இந்த தொலை நோக்கு காட்டியை பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ) விவசாய வரட்சி கண்காணிப்பு மற்றும் முன் எச்சரிக்கை முறைமை பற்றிய கருத்திட்டத்தின் 90மூ பணிகள் பூரணமாகியுள்ளது என்பதோடு, இக் கருத்திட்டத்தோடு தொடர்புடைய ஏனைய அரச நிறுவனங்களினால் செய்யப்பட்ட பங்களிப்பு மந்த கதியில் இருந்த காரணத்தினால் இக் கருத்திட்டத்தின் இறுதிக்கட்ட பணியும் தாமதமாகியுள்ளது. எவ்வாறாயினும் விவசாய தரவுகளை சென்மதித் தரவுகளுடன் ஒப்பீடு செய்தலானது விதாதா நிலையங்களை சார்ந்த விஞ்ஞான தொழில்நுட்பவியல் அலுவர்களின் ஆதரவுடன் தொழில்நுட்பவியல் கருவிகளை பயன்படுத்தி (கூகுள் ரைவ்) முன்னெடுக்கப்பட்டது

ஈ) மேற்கூறப்பட்ட கருத்திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டதினால் நவீன தொழினுட்பவியலக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகத்தின் தொடர்பாடல் பிரிவானது அதிக அனுபவங்களை பெற்றுக் கொள்ள கூடியதாகிற்று. இதற்குள் மனித மணித்தியாலங்களை கணிப்பீடு செய்தல், கருத்திட்டத்திற்கான நாட்கள் உரிய காலத்தில் கிடைக்கப்பட வேண்டிய காப்பு சேவைகள் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய பெறுகை நடவடிக்கைகள் போன்ற இதரபல விடயங்கள் உள்ளடங்கும். தற்போது இருக்கின்ற வசதி வாய்ப்புக்களுக்கு அமைவுற நோக்கின் ஒரு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் என்ற வகையில் விருத்தி செய்யப்பட்ட ஏதேனும் ஒரு தொழில்நுட்பத்தை அரச அல்லது தனியார் நிறுவகத்திற்கு வழங்குதல் எனபது கடினமானதாகும் போதுமானளவு மனித வளங்கள் மற்றும் ஆதரவுடன் தனிப்பட்ட

முறையில் அக ரீதியில் ஒரு பொறி முறை பேணப்படல் வேண்டும் (தொழில்நுட்பவியல் மாற்றீடும் அதன் பிரயோகமும்) விசேடமாக இது பேணல் கட்டத்தில் மிகவும் முக்கியமானதமாகும். விநியோக சேவைகளுக்கான கருத்திட்டங்கள் அமுலாக்கம் செய்யப்படவில்லை என்பதோடு தேசிய நீர் வளங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் புதிய பிரிவுகளின் தேவைப்பாடுகளிற்கு அமைவுற விலைப்புள்ளிகளுக்கான அழைப்பு ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது. இதைவிட சம்மந்தப்பட்ட துறையில் பயிற்சிகளை வழங்குதல் தொடர்பில் கலந்துரையாடல்களாவன புகையிர திணைக்களம் போன்ற நிறுவகங்களுடன் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன

4.3 தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

பாவிக்கப்படாத சொத்துக்களை பேணல் தொடர்பில் கணக்காய்வில் காட்டப்பட்ட அவதானிப்பு சரியானது ஆகும் என்பதுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் சம்மந்தப்பட்டுள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மின்னியல் உபகரணங்களின் இருப்பினை பேணல் அவசியமாகும். கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும் போதும் நடைமுறையில் உள்ள கருத்திட்டங்களின் திருத்த வேலைகளின் போதும் குறித்துரைக்கப்பட்ட இந்த உபகரணத்தை உடனடியாகவே சந்தையில் கொள்வனவு செய்தல் கடினமாகும். இதன் காரணமாக இருப்புக்கள் பேணப்படல் வேண்டும்

4.4 பாவிக்கப்படாத சொத்துக்கள்

UAV டிராண் (UAV drone) இன் பறத்தல் செயல்பாட்டை சோதிப்பதற்கு தேவையான ஆவணங்களை (நடைமுறையிலுள்ள பாதுகாப்பு சட்டங்களும் சிவில் விமான போக்குவரத்து சட்டமும்) பெற்றுக் கொள்வதற்கு நீண்டகாலம் எடுத்தது என்பதுடன் இது தொடர்பில் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலினை தொடர்ந்து பறத்தல் செயற்பாட்டிற்கு பொருத்தமானதொரு நிலத்தினை ஒதுக்கீடு செய்வதற்கான புரிந்துணர்வு உடன் படிக்கையில் சம்மந்தப்பட உத்தேசிக்கப்பட்டதுடன் இந்த நிறுவகத்தின் கூட்டுறவு பற்றிய விபரங்களாவன நிறுவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4.5 பதவியணி நிர்வாகம்

(அ)/(ஆ)/(இ)

கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட செயற்றிடங்களை நிரப்புவதற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புதினப்பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன

பதவி	விளம்பரப்படுத்தப்பட்ட திகதி
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)	06.05.2016
பாணிப்பாளர் (விண்வெளி தொழினுட்பம் மற்றும் பிரயோகம்) பணிப்பளர் கருவிகள் ஏற்பாடு பணிப்பளர் தகவர் தொழினுட்பம்	01.07.2016
எந்திரவியல் உதவியாளர்	11.08.2016
சிரேட்ட ஆராய்ச்சி எந்திரி ஆராய்ச்சி எந்திரி AR2	
கணணி பட வரைபியல் எந்திரி	11.08.2016
பாணிப்பாளர் (விண்வெளி தொழினுட்பம் மற்றும் பிரயோகம்) பணிப்பளர் கருவிகள் ஏற்பாடு பணிப்பளர் தகவர் தொழினுட்பம்	08.01.2017
சிரேட்ட முறைமை பகுப்பாய்வாளர்	09.05.2017
சிரேட்ட பிரதி பணிப்பளர் (மனித வள நிர்வாகம்)	
எந்திரவியல் உதவியாளர்	
பிரதி பணிப்பாளர் நாயகம்	06.12.2017

பதவியை இராஜிநாம செய்த திகதியான 2017.05.31 ஆம் திகதியிலிருந்து இப் பதவி வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளது

பணிப்பளர் பதவியினை (தகவல் தொழினுட்பம்) நிரப்புதல் பொருட்டு 2016 மற்றும் 2017 ஆகிய இரு வருடங்களிலும் புதியப்பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படவில்லை.

பணிப்பாளர் (விண்வெளி தொழினுட்பம் மற்றும் பிரயோகம்), சிரேட்ட ஆராய்ச்சி எந்திரி மற்றும் சிரேட்ட ஆராய்ச்சி எந்திரி AR 2 ஆகிய பதவிகளுக்கு புதியப் பத்திரிகையில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும் தகைமை உடைய விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை.

பணிப்பளர் (விண்வெளி தொழினுட்பம் மற்றும் பிரயோகம்) பதவிக்குரிய அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த ஒரு விண்ணப்பதாரி 2017 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட புதினப்பத்திரிகை அறிவித்தலுக்கு பதிலளிக்கும் வகையில் விண்ணப்பித்திருந்த போதிலும் அக் குறிப்பிட்ட விண்ணப்பதாரி நேர்முக பரீட்சையில் நிராகரிக்கப்பட்டார்.

2017.01.08 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட புதினப்பத்திரிகை விளம்பரமத்திற்கு அமைவுற கணணி பட வரைவியல் வடிவமைப்பு பதவிக்கு அக ரீதியில் ஒரு விண்ணப்பதாரியும் வெளிவார ரீதியாக இரு விண்ணப்பதாரிகளும் 2017.03.01 ஷஆம் திகதியிலிருந்து நியமனம் செய்யப்பட்டார்.

சிரேட்ட முறைமை பகுப்பாய்வாளர் பதவி தொடர்பில் 2017.05.09 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலுக்கு விண்ணப்பித்த அக விண்ணப்பதாரிக்கு 2018.02.05 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் நியமனம் வளங்கப்பட்டது

சிரேட்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) பதவி தொடர்பில் 2017.05.09 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலுக்கு விண்ணப்பித்த ஒரு விண்ணப்ப தாரிக்கு நியமன் வழங்கப்படுதலுக்கு தாமதம் ஏற்பட காரணம் நேர் முக பரீட்சையில் ஏற்பட்ட சிக்கல்கள் ஆகும் ஆதலினால் பதில் அடிப்படையில் அந்த நியமனமானது மேற்கொள்ளப்பட்டது.

தற்போது எந்திரவியல் உதவியாளர் பதவிக்கான நேர்முக பரீட்சையினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மித்த எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புக்கள் மேற் கொள்ளப்படும்

பிரதி பணிப்பாளர் நாயகம் பதவி தொடர்பில் 2017.12.06 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலுக்கு கோரப்பட்ட தகைமையை கொண்ட ஒரு விண்ணப்பதாரியே விண்ணப்பித்திருந்தார் என்பதோடு இவர் நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் அவர் தனிப்பட்ட காரணங்களின் காரணமாக அவர் இந்த நியமனத்தை ஏற்றுக் கொள்ளாது நிராகரித்தார்

பணிப்பாளர் பதவிக்கு (கருவிகள் ஏற்பாடு) ஒரு அக விண்ணப்பதாரி விண்ணப்பித்திருந்தார். 2018.02.15 ஆம் திகதியன்று நியமனம் வழங்கப்பட்டது.

நிறுவன ரீதியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் அரச துறை சம்பள அளவுத்திட்டத்தில் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்ளவதிலும் மற்றும் புதிதாக நியமனம் வழங்குவதிலும் பிரச்சனைகள் இன்னமும் காணப்படுகின்றது.

நிறுவகத்தின் செயற்பாடுகள் தங்குதடையின்றி முன்னோக்கி எடுத்து செல்லப்படுவதற்கும் அது போன்று தகைமையுடைய விண்ணப்பதாரிகள் இப் பதவிக்கு விண்ணப்பிக்காததாலும் பதில் அடிப்படையிலான பதவிகளை நிரந்தர அடிப்படையிலான பதவிகள் என்ற ரீதியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அது போன்று பதில் அடிப்படையிலான நியமனங்களை அதற்கு பதிலாக தற்காலிக அடிப்படையிலான பதவிகள் என்ற வகையில் நிரப்புவதற்கும் விளம்பர அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன.

2016 மற்றும் 2017 ஆகிய இரு வருடங்களிலும் பணிப்பாளர் பதவிக்கு – HM1-3 (விண்வெளி தொழினுட்பம் மற்றும் பிரயோகம்) விளம்பர அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் ஒரே ஒருவரே விண்ணப்பித்திருந்த போதிலும் நேர்முக பரீட்சையில் அவர் நிராகரிக்கப்பட்டார்

2016 ஆம் ஆண்டில் பணிப்பாளர் (கைத்தொழிற் சேவை) எனும் பதவியானது பணிப்பளர் (கருவிகள் சேவை) என மாற்றப்பட்டது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புதினப்பத்திரிகையில் விளம்பர படுத்தல்கள் பிரசுரிக்கப்பட்டதுடன் இப் பதவிக்கு பொருத்தமான தகைமையுடைய அக விண்ணப்பதாரிகளை விண்ணப்பிக்கும் படி 2018.02.15 ஆம் திகதயிலிருந்து ஊக்குவிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் சிரேட் பிரதிப்பணிப்பளர் எனும் பதவியானது (தகவல் தொழினுட்பம்) பணிப்பளர் (தகவல் தொழினுட்பம்) என்னும் பதவியாக மாற்றம் செய்யப்பட்டதுடன் இது தொடர்பில் 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் விளம்பர அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தகைமையுடைய எந்தவித விண்ணபதாரியும் விண்ணப்பிக்கவில்லை.

பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) என்ற பதவியை வகித்து வந்த அலுவலர் ஓய்வு நிலைக்குட்பட்ட காரணத்தினால் இப் பதவி வெற்றிடமானது.

நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்லப்படல் வேண்டும் என்ற அவசியத் தன்மையின் காரணமாக மேற் கூறப்பட்ட பதவிக்குரிய சில கடமைகளாவன பிரதிப் பணிப்பாளருக்கு (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் சபை பணிப்பாளர்களின் அனுமதியுடன் சிரேட்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) பதவிக்குரித்தான கடமைகளையும் மேற் கொள்ளும் விதத்தில் பதில் அடிப்படையில் நியமனங்கள் வளங்கப்பட்டன

வெற்றிடாக இருந்த பிரதிப்பணிப்பளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) பதவியானது 2016.08.01 இல் நிரப்பப்பட்ட போதிலும் குறிப்பட்ட அலுவலர் 2017.05.31 அன்று இராஜினாம செய்த காரனத்தினால் அந்த பதவி மீண்டும் வெற்றிடமாகியது

5. நிலை பெறுதகு அபிவிருத்தி

5.1 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை சாதித்தல்

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் பற்றிய UN நிகழ்ச்சி நிரல் 2030 இற்கு அமைவுற எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கான நேரடி பொறுப்பினை அமைச்சு கொண்டில்லாததால்

6. பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பெறுகைகள்

அ) அரச பெறுகை செயன்முறை 8.9.1 (ஆ) இலுள்ள வழிகாட்டல் பின்பற்றப்பட்டதுடன் விநியோகத்துடன் தொடர்புற்ற வகையில் ஏற்படக் கூடிய இடர்வரவுகள் (தாமதங்களுக்கான கட்டணம், முறிக்குரிய பிணைய இதர) தொடர்பில் உடன் படிக்கையின் ஊடாக நிறுவனத்தின் சார்பில் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமையை நாம் அவதானித்தோம் என்பதுடன் இது தொடர்பிலான ஆவணங்கள் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆ) கேட்போர் கூடத்திற்கு செவிப்புலன், கட்புலன் மற்றும் மின்னியல் முறைமைகளை தாபித்தல்.

(I) பெறுகை செயன்முறைக்கு வெளிவாரி அடிப்படையில் உசாவுத்துணை சேவைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும் உசாவுத்துணை சேவைகளை வழங்கும் நிறுவனங்களாவன சிற்சில வேலைகளை அதாவது குறித்துரைப்புக்களை தயாரித்தல் மற்றும் விலைப்புளய்ளி ஆவணங்கள் போன்ற வேலைகள் பூரணப்படுத்தி தரும்படி வேறு ஒரு நிறுவனத்திற்கு கையளிக்கும். அத்துடன் முறையான குறித்துரைப்புக்களை தயாரிப்பதற்கு நிறுவனத்திற்கு அதிக காலம் செலவிட வேண்டியிருக்கும். கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள தாமத நிலையானது நிறுவனத்திற்கு ஏற்படுத்துவதற்கு காரணம், தொழினுட்பவியல் மாற்றியமைவுகளை சரியான முறையில் கண்டு பிடிப்பதற்கு நடப்பில் பயன்படுத்தப்படும் நவீன

தொழினுட்பவியல் கருவியினை பயன்படுத்தியமை மற்றும் நிறுவகத்தின் குறிக்கோள்களை சாதிக்கும் பொருட்டு தேவைப்படக்கூடிய துல்லியமான குறித்துரைப்புக்களை தயாரிப்பதற்கு தேவையான கருவியினை கொள்வனவு செய்தல் போன்ற முற்றுமுழுதாக தொழினுட்பவியல் சார் விடயங்கள் ஆகும்.

(II) கணக்காய்வு அவதானிப்பில் காட்டப்பட்டது போன்று கட்டுப்பாட்டு அறையின் தள பணியானது கட்டிட திணைக்களத்தினால் பூரணப்படுத்துகை செய்யப்பட வேண்டும். செவிப்புல, கற்புல முறைமையினை பொறுத்தும் நிறுவகத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவுற அறையின் ஒலி முறைமைக்கு எதுவித இடையூறும் ஏற்படாத வகையில் மின்சாரத்தினால் ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்க்கும் நிமித்தம் கம்பளம் ஒன்று விரிக்கப்படல் வேண்டும் இச் செயற்பாடானது ஏனைய நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதை அறியச் செய்ய விரும்புகின்றோம்.

கணக்காய்வு அவதானிப்பில் காட்டப்பட்ட வாறு நீர் ஒழுகல் பிரச்சனையானது அதே நாளில் எடுத்துக் கூறப்பட்டதோடு இந்த ஒழுக்கலானது, விநியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது

கேட்போர் கூடத்திற்கு தளபாடங்களை பெறுகை செய்வதற்கான கொள்வனவு கட்டளையானது ஏற்கனவே விநியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த பெறுகை செயன்முறையில் எதுவித தாமதமும் ஏற்படவில்லை.

கணக்காய்வு அவதானிப்பிற்கு அமைவுற செயலாற்றுகை முறியானது காலாவதியாகி விட்டது என்பதுடன் இதனுடன் தொடர்புடைய அனேகமான பணிகளாவன ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்ட போதிலும் அவசியப்படகூடிய கருவிகளாவன நிறுவகத்தினால் வழங்கப்பட்டிருந்தும் பணிகளை பூரணப்படுத்துவதற்கு கணிசமானளவு காலமானது விநியோகத்தரினால் எடுக்கப்பட்டிருந்தது. பணியானது பூரணப்படுத்தப்பட் பின்பு தாமதக் கட்டணமானது நிறுவகத்தினால் அறவீடு செய்யப்படும்.

இதற்கமைவுற, அவதானிப்பில் காட்டப்பட்டுள்ள சிக்கல்களை தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை அவதானிக்கப்படக்கூடியதாகவுள்ளது.

7. முறைமையும் கட்டுப்பாடும்

முறைமையும் கடப்பாடும் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்பில் காட்டப்பட்டுள்ள குறைகளை தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளாவன எடுக்கப்படல்

ஒப்பம் / பேரா. கே.கே.சி.கே. பெரேரா
பதில் தலைவர்

© Arthur C Clarke. Institute for Modern Technologies

Katubedda, Moratuwa, 10400, Sri Lanka

Email us : info@accmt.ac.lk

Call us (General) : : Telephone : +94-11-2650569, +94-11-2650838

Fax : +94-11-2650462

www.accimt.ac.lk